Registered as a news paper

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 8.00

# நமது ஈழநாடு

## தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

இப்போது நாம் யாழ் நகரிலும்

10-15 நிமிடங்களில்....

பாஸ்போட்,

அடையாள அட்டை படங்கள் மற்றும்

Album Binding

Photo Creations

Duro Laminating

Photo Graphing

Digital Video



MOORTHY STUDIO AND DIGITAL COLOUR LAB

62/16 STANLEY ROAD, JAFFNA.

T.P 021-222 2884

JAFFNA ROAD, MANIPAY.

மலர்:03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 ஆடி- 01 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ஜ-ஆகிர் 09 (17.07.2005) ஞாயிற்றுக்கிழமை இதழ்:290

## இராணுவச் சிப்பாய் ஒருவர் மட்டக்களப்பில் சூட்டுக்கு பலி!

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு நகருக்கு வடக்கேயுள்ள வந்தாறுமூலைப் பகுதியில் - தேவாலயம் ஒன்றுக்கு அருகே வீதிக்கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் நேற்று மாலை இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

நேற்று மாலை 5.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. மட்டக்களப்புக்கான பிரான விநியோகப் பாதையில் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

12 ஆவது ஆட்டிலறி படைப்பிரிவைச் சேர்ந்த சுடுனரான எம்.எஸ்.கே. கந்தப்பொல என்ற சிப்பாயே சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயா ரத்னாயக்க தெரிவித்தார்.

காவலில் ஈடுபட்டிருந்த சிப்பாய் அருகே வந்த இளைஞர் ஒருவர் கைத்துப்பாக்கியால் இரண்டு முறை சுட்டதாகவும் - (12 ஆம் பக்கம் பார்க்க)

## அடுத்த ஜனாதிபதித் தெரிவு நாடாளுமன்றின் மூலம்?

### கொழும்புப் பத்திரிகை தகவல்

கொழும்பு —

அடுத்த ஜனாதிபதியை நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலம் தெரிவு செய்வதற்கான சட்டத் திருத்தப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாக கொழும்புப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அரசியலமைப்பில் இரண்டு திருத்துங்களைச் செய்வதற்கான பிரேரணைகளை நாடாளுமன்றத்தில் கொண்டுவருவதற்கான வர்த்தமானி அறிவித் (12 ஆம் பக்கம் பார்க்க)

## கருணா அணியை சேர்ந்தவர் சிலாபத்தில் சுட்டுக் கொலை!

கொழும்பு —

கருணா அணியைச் சேர்ந்த ஒருவர் நேற்றுப் பிற்பகல் சிலாபத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார். சிலாபத்திலுள்ள ஹொட்டேல் ஒன்றுக்கு மதிய உணவுக்காகச் சென்றபோதே - திருகோணமலையைச் சேர்ந்த ஆறுமுகம் குவேந்திரன் (வயது 28) என்ற இளைஞரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் ஹொட் டேலில் இருந்த இன்னொருவரும் காயமடைந்தார்.

துப்பாக்கிச் சூட்டை நடத்திய இளைஞர் ஓட்டோ ஒன்றில் ஏறித் தப்பிச்சென்றபோது பொலிஸார் விரட்டிச்சென்றனர்.

ஆனமடுவவில் குறித்த இளைஞர் பயணிகள் பஸ் ஒன்றில் ஏறித்தப்ப முயன்றபோது பொலிஸார் அவரைக் கைது செய்தனர் என்றும் அவரிடமிருந்து 9 மி.மீ பிஸ்ரல் ஒன்று கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸ் தரப்புச் செய்திகள் தெரிவித்தனர்.

# அரசாங்கத்தின் போக்கைக் கண்டித்து

# குடாநாட்டில் எழுச்சிப் போராட்டங்கள்!

## தலைநகர் கொழும்பில் பாதுகாப்புத் தீவிரம்!

கொழும்பு

கொழும்பு நகரில் அரசாங்க அச்சகம் உள்ளிட்ட முக்கிய அரச நிர்வாகக் கட்டடங்களுக்கு பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் பெருமளவு படையினர் குவிக்கப்பட்டுப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பதாகவும் செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை - திருகோணமலை மாவட்டத்திலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கென 5 ஆயிரம் படையினர் மற்றும் பொலிஸார் திருகோணமலைக்கு வரவழைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஏற்பாடுகளில் பொது அமைப்புக்கள் மும்முரம்

யாழ்ப்பாணம் —

**போர் நிறுத்த உடன்பாட்டின் கீழ் - இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் அரசியல் பணியில் ஈடுபட்டிருக்கும் போராளிகள் தொடர்ச்சியாகப் படுகொலை செய்யப்பட்டு வருவதைக் கண்டித்தும் - போராளிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த மறுக்கும் அரசின் செயலுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் -**

**வடக்கு - கிழக்குப் பகுதிகளில் தொடர்ச்சியாக அதிகரித்து வரும் இராணுவ நெருக்குவாரங்கள் மற்றும் படைக் குவிப்புக்கள் மூலம் போருக்குத் தயாராகும் அரசின் செயற்பாடுகளைக் கண்டித்தும் யாழ். குடாநாட்டில் மிகப் பெரியளவிலான வெகுசனப் போராட்டங்களை முன்னெடுப்பதற்கு ஏற்பாடுகள் இடம்பெற்று வருவதாகத் தெரியவருகிறது.**

**உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் இராணுவத்தினர் தமிழ் மக்களின் நிலங்களில் நிலைகொண்டிருக்கின்றனர். தம்மை மீளக் குடியமர அனுமதிக்குமாறு கோரி இடம்பெயர்ந்த மக்கள் பல்வேறு போராட்டங்களை நடத்தியும், இதுவரை எந்த மாற்றமும் ஏற்படவில்லை.** (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஆளுநர் நிகழ்வை எம்.பிக்கள் பகிஷ்கரிப்பு!


யாழ்ப்பாணம்

தெல்லிப்பளை புற்றுநோயாளர் சிகிச்சை நிலையத் திறப்பு விழாவில் - ஆளுநர் கலந்துகொள்வதை எதிர்த்து கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த நிகழ்வை பகிஷ்கரித்தனர்.

தெல்லிப்பளை புற்றுநோயாளர் வைத்தியசாலை நேற்று வடக்கு-கிழக்கு ஆளுநர் ரிரோன் பெர்னாண்டோவால் திறந்து வைக்கப்பட்டது.

உயர்பாதுகாப்பு வலயத்தின் மீள் குடியமர அனுமதி வழங்க மறுக்கும் அரசின் பிரதிநிதியான ஆளுநர் இந்த (12 ஆம் பக்கம் பார்க்க)

## புற்றுநோயாளர் வைத்தியசாலை தெல்லிப்பளையில் திறந்துவைப்பு!



## சோமவன்சவை கைதுசெய்ய ஜனாதிபதி சந்திரிகா திட்டம்!

## தெல்லிப்பளையில் திறந்துவைப்பு!

யாழ்ப்பாணம்

தெல்லிப்பளை புற்றுநோயாளர் வைத்தியசாலை நேற்றுக் காலை 10.30 மணியளவில் வட-கிழக்கு மாகாண ஆளுநர் டிரோன் பெர்னாண்டோவால் திறந்து வைக்கப்பட்டது.

நேற்றுக்காலை விசேட விமானம் மூலம் பலாலியை வந்தடைந்த ஆளுநர் - விசேட பாதுகாப்புகளுடன் தெல்லிப்பளை புற்றுநோயாளர் வைத்தியசாலைக்கு வந்தார். காலை 10.15 மணியளவில் வைத்தியசாலை புனரமைக்கப்பட்டமைக்கான நினைவுப்பலகையைத் திறந்துவைத்ததுடன், தொடர்ந்து தெல்லிப்பளை புற்றுநோயாளர் வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவை நாடாவெட்டி திறந்து வைத்தார்.

தொடர்ந்து அங்கு சிகிச்சைக்குப் பயன்படுத்த வைக்கப்பட்டிருந்த உபகரணங்களை பார்வையிட்டதுடன், புற்றுநோய்க்கான சிகிச்சை நிலையத்தையும், நாடாவைவெட்டி திறந்து வைத்தார். கதிரியக்கக் கருவியை இயக்கிவைத்ததுடன் அங்கு நடைபெற்ற விசேட நிகழ்விலும் கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வில் மத்திய சுகாதார அமைச்சின் செயலாளர் சிறிவர்த்தன, சுகாதார அமைச்சின் வட-கிழக்கு(12 ஆம் பக்கம் பார்க்க)



திருகோணமலைக்கு நேற்றுமுன்தினம் விஜயம் மேற்கொண்ட கூட்டுப்படைகளின் தளபதி தயா சந்தகிரி மற்றும் இராணுவத் தளபதி சாந்த கொட்டேகொட அடங்கலான உயர்மட்டப் பாதுகாப்புக் குழுவினர் திருமலை கடற்படைத் தளத்தின் பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பார்வையிடுகின்றனர்.

## ஜனாதிபதி சந்திரிகா திட்டம்!

### தகவல் கசிந்ததால் கட்சிக்குள் குழப்பம்

கொழும்பு

ஜே.வி.பி தலைவர் சோமவன்ச அமரசிங்கவை அடுத்த சில தினங்களுக்குள் கைதுசெய்வதற்கு ஜனாதிபதி சந்திரிகா தீர்மானித்துள்ளதாக ஜே.வி.பிக்குத் தகவல் கிடைத்ததையடுத்து அந்தக் கட்சிக்குள் குழப்பம் உருவாகியுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

போலி பிரயாண அனுமதிப்பத்திரம் (பாஸ்போர்ட்) பாவித்தல், தங்கக்கொள்கை மற்றும் கொலைக்குற்றச்சாட்டு போன்ற காரணங்களால் சோமவன்ச கைது செய்யப்படலாமென அந்தக் கட்சிக்குத் தகவல் கிடைத்துள்ளது.

சோமவன்ச அமரசிங்கவைக் கைதுசெய்வதற்குத் தேவையான தகவல்கள் அனைத்தும் குறித்த விசாரணைகளை மேற்கொண்டு வரும் அதிகாரிகளுக்குக் கிடைத்துள்ளது.

இந்தநிலையில் - ஜனாதிபதியின் அனுமதியுடன் இது குறித்த விசாரணைகளை மேற்கொண்டு வரும் குழுவினரால் உடனடியாக சோமவன்ச கைது செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (தே)

## ஆயுதங்களுடன் நடமாடுவதற்கு புலிகளை அனுமதிக்க முடியாது!

### இராணுவப் பேச்சாளர் தயா ரத்நாயக்கா

கொழும்பு

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் - விடுதலைப் புலிகள் ஆயுதங்களுடன் நடமாட ஒருபோதும் இடமளிக்க முடியாது என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயா ரத்நாயக்க தெரிவித்தர்.

போராளிகளின் போக்குவரத்துத் தொடர்பாகவும் -பாதுகாப்பு உத்தரவாதம் தொடர்பாகவும் புலிகள் அனுப்பியுள்ள கடிதம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

புலிகள் ஆயுதங்களுடன் எமது எச்சரிக்கையையும் மீறி - இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் நுழைந்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலை உருவாகும் என்றும் இராணுவப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

## அனர்த்த முகாமைத்துவப் பணிப்பாளராக மேஜர் ஜெனரல் ஹெற்றியாராச்சி நியமனம்!

கொழும்பு

கிழக்குப் பிராந்தியத்துக்கான இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் காமினி ஹெற்றியாராச்சி இராணுவத்தில் இருந்து விடுவிக்கப்பட்டு - அனர்த்த முகாமைத்துவப் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

திடீரென கொழும்புக்கு மாற்றப்பட்ட அவர் - கடந்த வியாழக்கிழமை முதல் இந்தப் புதிய பதவிப்பொறுப்பில் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் சாந்த கொட்டேகொடவுக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் லெப். ஜெனரல் அசோக ஜெயவர்தன, இது தொடர்பாக அறிவித்துள்ளார்.


மேஜர் ஜெனரல் ஹெற்றியாராச்சியை இராணுவத்திலிருந்து விடுவிக்குமாறும்- அதே வசதி வாய்ப்புக்களுடன் அவர் அனர்த்த முகாமைத்துவப் பணிப்பாளராகச் செயற்பட வழி செய்யுமாறு கேட்டிருந்தார்.

ஹவாயிலுள்ள அனர்த்த முகாமைத்துவ நிலையத்துடன் இணைந்ததாக இவர் செயற்படுவார்.

மேஜர் ஜெனரல் காமினி ஹெற்றியாராச்சி இடமாற்றப்பட்டதை அடுத்து கடந்த புதன்கிழமை கிழக்குப் பிராந்திய இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் ரி.ரி.ரஞ்சித் டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

இராணுவத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் திடீரென சேவையிலிருந்து விடுவிக்கப்பட்டு பொது நிர்வாகப் பணிக்கு மாற்றப்பட்டுள்ளது குறித்துச்

(12 ஆம் பக்கம் பார்க்க)



தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலையை வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் டிரோன் பெர்னாண்டோ திறந்து வைப்பதையும், நிகழ்வில் கலந்து கொண்ட பிரமுகர்களையும், புதிதாகப் பொருத்தப்பட்ட சிகிச்சை உபகரணத் தொகுதியையும், இன்னமும் திருத்தப்படாதிருக்கும் வைத்தியசாலைக் கட்டடத் தொகுதியையும் படங்களில் காணலாம்.

# சமுர்த்தி முகாமையாளர்களுக்கு அவசர கலந்துரையாடல் இன்று

யாழ்ப்பாணம்—

யாழ். மாவட்ட சமுர்த்தி முகாமையாளர் சங்கத்தின் அவசர கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு சங்கத் தலைவர் ஆ. இரகுநாதன் தலைமையில் யாழ்ப்பாணம் டி. எம். ஐ. கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் சமுர்த்தி முகாமையாளர்கள் எதிர்நோக்கும் இடர்கள், அனுகூலங்கள் தொடர்பாக முன்னெடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும், சமுர்த்தி முகாமையாளர்கள் தாய்ச் சங்கத்தின் நடவடிக்கைகள் பற்றி அறிவதற்குமான முக்கிய விடயங்கள் பற்றி கலந்துரையாடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட சமுர்த்தி முகாமையாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்வதுடன் தங்களது பதவி முத்திரைகளை தவறாது எடுத்துவருமாறு சங்கத் தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார். (44)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு மாதாந்தம் ஆயிரம் ரூபா கொடுப்பனவு!

## சின்மியா மிசன் நிறுவனம் வழங்குகிறது

வடமராட்சி—

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சிவலயத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு கொழும்பு சின்மியாமிசன் நிறுவனத்தார் இரண்டு வருடங்களுக்கு ஒரு மாணவனுக்கு மாதாந்தம் ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கவுள்ளனர்.

இந்த மாணவர்களுக்கான நேர்முகத் தேர்வு நேற்று நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் வடமராட்சி வலய கல்விப் பணிப்பாளர். சி. நந்தகுமார் தலைமையில் நடைபெற்றது.

இதில் உடுத்துறை மகாவித்தியாலயம், ஆழியவளை சி.சி.இ. த.க. பாடசாலை, தும்பளைசைவப் பிரகாசவித்தியாலயம், வல்வை சிவகுரு வித்தியாலயம், பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம், வேலாயுதம் மகாவித்தியாலயம், ஹாட்லிக்கல்லூரி, வட இந்து மகளிர் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை போன்ற பாடசாலைகளிலிருந்து 77 மாணவர்கள் இந்த நேர்முகத் தேர்வில் பங்கேற்றனர்.

மேற்படி மாணவர்களிலிருந்து 50 மாணவர்கள் மட்டும் தெரிவு செய்யப்பட்டு இவர்களுக்கான உதவிப் பணம் இன்று காலை 9 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் வழங்கப்படவுள்ளது. (12)

# குடாநாட்டின் சில பகுதிகளில் இன்று மின்சாரம் தடைப்படும்!

யாழ்பாணம்—

இலங்கை மின்சாரசபையின் யாழ். பிரதேச அலுவலகத்துக்கு உட்பட்ட பிரதேசங்களில் அவசர திருத்த வேலை காரணமாக இன்று காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை பின்வரும் இடங்களில் மின்தடைப்படவுள்ளதாக இலங்கை மின்சார சபையின் பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

வலிகாமம் கிழக்கு, நல்லூர், கல்வியங்காடு, பட்டணப்பகுதி நீங்கலாக யாழ். மாநகரசபைப் பகுதி, தென்மராட்சிப் பிரதேசம், வடமராட்சி பிரதேசம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, புன்னாலைக்கட்டுவன், அச்செழு, உரும்பிராய், கோண்டாவில், காங்கேசன்துறை உயர்பாதுகாப்பு வலயப் பகுதி ஆகியவற்றுக்கே மின்சாரம் தடைப்படவுள்ளது. குறிப்பிட்ட நேரத்திற்குள் திருத்த வேலைகள் முடிவுற்றவுடன் மின்சாரம் வழங்கப்படுமென மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# விசுவமடு விபத்தில் ஒருவர் படுகாயம்!

யாழ்ப்பாணம்—

மோட்டார் சைக்கிள் - சைக்கிள் விபத்தில் ஒருவர் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் விசுவமடு ரெட்பானா சந்தியில் நடைபெற்ற இந்த சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த 65 வயதுடைய பீ.மாரிமுத்து என்பவரே படுகாயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த இவர் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# பரிசளிப்பு நிகழ்வு!

தென்மராட்சி—

தென்மராட்சி கல்வி வலயத்தால் நடத்தப்பட்ட அறநெறிப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டியோருக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று முற்பகல் 11.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

முன்னதாக காலை 9 மணிக்கு தரம் ஒன்று முதல் ஐந்து வரையான மாணவர்களுக்கான மனனம் ஒப்புவித்தல் போட்டி நடைபெறும்.

இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் கலந்து கொள்ளவுள்ளார்.

# சொற்பொழிவு!

பருத்தித்துறை—

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் வாரந்தோறும் நிகழும் ஆன்மீக சொற்பொழிவுத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை இராமாயணம் பற்றிய தொடர் சொற்பொழிவை சொல்வேந்தர் பொன். சுகந்தன் நிகழ்த்தவுள்ளார்.

இந்த நிகழ்விற்கான ஆசியுரையை ஆச்சிரம பீடாதிபதி வை.ஆனந்தராசாவும், அறிமுகவுரையை ம.பகீரதனும் நிகழ்த்தவுள்ளனர்.

# கலைநிகழ்வுகள்!

யாழ்ப்பாணம்—

நல்லூர் சங்கிலியன் மன்றத்தின் 60ஆண்டு நிறைவை முன்னிட்டு இன்று மாலை 3 மணிக்கு விளையாட்டுப்போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

தொடர்ந்து நாளையும், நாளை மறுதினம் புதன்கிழமையும் கலைநிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

வல்லைக் கணபதியின் வர்ண மின்னொளியில் நடன நிகழ்வும், இசை நிகழ்வும் இடம்பெறும்.


**சிறு விளம்பரம்**

**ஸ்ரீ மலையாள பகவதி ஜோதிடாலயம்**

**Pandit Nara Semanaidu World Expert Astrologer**

இந்தியாவின் கர்நாடகாவிலிருந்து வந்திருக்கும் சர்வதேச ஜோதிடர் பண்டிதர் நரசிம்ம நாயுடு அவர்கள் ஓம் சிவசக்தி அருள்கொண்டு கை ரேகை, பிறந்த திகதி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகிறவை, தொழில் வியாபார இலட்சுமிகர விடயங்கள், விவாக, வாகனப் பொருத்தங்கள், கல்வி, குடும்ப ஒற்றுமைகள் மற்றும் எதிர்கால பலாபலன்களை அறிந்துகொள்ள தொடர்புகளுக்கு: ஹோட்டல் பிள்ளையார் இன், அறை இல.09 - 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். T.P- 0779122836

நேரம்:காலை9.00 - 8.30 வரை.(1198)

**மென்பொருட்சேவை**

தங்களுக்குத் தேவைப்படும் பிரத்தியேக Softwares வடிவமைத்துக் கொடுக்கப்படும். கட்டணம் 10,000/- இலிருந்து... கா.ஜீவலிங்கம் (மென்பொருள் தயாரிப்பு வல்லுநர்), மே/பா இ. காசிராசலிங்கம், மாதகல் கிழக்கு, மாதகல், யாழ்ப்பாணம்.



அகில இலங்கை அஞ்சல் தந்தித் தொடர்புகள் சேவையாளர் சங்க யாழ். கிளையினால் நடத்தப்படும்

**சேவை நலன் பாராட்டு விழாவும் பிரிவுபசார விழாவும்**



**சம்பந்தர் சிவராஜசிங்கம்**

யாழ். மாவட்ட அஞ்சல் அத்தியட்சகராகத் தன்னலம் கருதாமல் சேவையாற்றி, அஞ்சல் திணைக்கள வளர்ச்சிக்கு தன்னையே அர்ப்பணித்துச் செயற்பட்டு, அனைவரது மனங்களிலும் குடியிருக்கும் எமது அன்புக்கும் மதிப்புக்குமுரிய

**சம்பந்தர் சிவராஜசிங்கம்**

அவர்களைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு

தலைவர் :- ப.உதயகுமார் (சங்கத் தலைவர்)
காலம் :- 2005-07-17 ஞாயிறு மு.ப. 10 மணி
இடம் :- பிரதம அஞ்சலகம், யாழ்ப்பாணம்.

அனைத்து அலுவலக அங்கத்துவ சகோதரர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

விழாக்குழு சார்பில் - ச.மோகனராஜ்
செயலாளர் (யாழ். கிளை)

(C/4295)





**11 ஆவது பிறந்தநாள் வாழ்த்து**

**செல்வி.க.சாகித்தியா**

17.07.2005 இன்று தனது 11 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடும் இல.60, பெரியகுளம் கண்டாவளையைச் சேர்ந்த கனகராசா மஞ்சுளாதேவி தம்பதியினரின்

செல்வப்புதல்வி

**சாகித்தியாவை**

கண்ணகை அம்பாள் துணையுடன் சகல கலைகளும் கற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறோம்.

இ.கனகராசா (அப்பா),
மஞ்சுளாதேவி (அம்மா),
உறவினர்கள்.

இல.60, பெரியகுளம்,
கண்டாவளை.

(C/4291)

# தமிழ் - முஸ்லிம் கலவரத்தை தூண்ட இராணுவப் புலனாய்வுப் பிரிவு சதி!

அம்பாறை

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்றுப் பிரதேசத்தில் 3 இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன், பொலிஸ் விசேட குற்றப் புலனாய்வுத் துறையினர் தொடர்புபட்டிருப்பதாக அந்தப் பிரதேச மக்கள் மத்தியில் சந்தேகங்கள் எழுந்துள்ளன.

குறிப்பிட்ட சம்பவத்தின்போது, உயிர்தப்பிய முஸ்லிம் இளைஞரொருவர் வெளியிட்டுள்ள தகவலையடுத்தே இந்தச் சந்தேகம் எழுந்துள்ளது.

இந்தச் சம்வம் தொடர்பாக குறிப்பிட்ட இளைஞர் - வெளியிட்டுள்ள தகவல்கள் மூலம் தெரியவருவதாவது,-

கடந்த வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அக்கரைப்பற்றிலிருந்து, குறிப்பிட்ட ஓட்டோவில் சாரதி உட்பட 3 பேர் (முஸ்லிம்கள்) அம்பாறைக்குச் சென்று, உணவு விடுதியொன்றில் உணவருந்திக் கொண்டிருந்த சமயம், அந்த விடுதிக்கு வந்த பொலிஸ் விசேட குற்றப் புலனாய்வுத் துறையைச் சேர்ந்த 3 பேர் அவர்களை விசாரித்தனர்.

அங்குள்ளஅக்கரைப்பற்று வாசி ஒருவரிடமும் இவர்களைக் குறித்த பொலிஸார் விசாரித்துள்ளனர். அவர்கள் தமக்கு இவர்களைத் தெரியாது எனத் தெரிவித்தனர்.

பிற்பகல் 1.45 மணியளவில் விடுதியைவிட்டு இவர்கள் வெளியேறிய போது, அங்கு காணப்பட்ட குறிப்பிட்ட குற்றப் புலனாய்வுத்துறையினர், அவர்களை அழைத்து தமது வாகனத்தில் ஏற்றிச் சென்றுள்ளனர். பொலிஸாரில் ஒருவர் ஓட்டோவைச் செலுத்தினார்.

குறிப்பிட்ட வாகனம் அம்பாறைப் பொலிஸ் நிலையத்துக்கு அண்மித்த பகுதியில் நிறுத்தப்பட்டபோது, ஆயுதங்களுடன் மேலும் சிலர் அங்கு வந்து போயுள்ளனர். பின்பு வாகனம் புறப்பட்டு, மாலையில் அம்பாறை சுற்றுவட்டத்துக்கு அருகாமையில் நிறுத்தப்பட்ட போது,

அங்கு காணப்பட்ட மற்றொருவாகனத்துக்கு இவர்கள் மாற்றப்பட்டனர். அந்த வாக னத்துக்குள் 4 தமிழ் இளைஞர்கள் கைகள் கட்டப்பட்ட நிலையில் காணப்பட்டனர். இவர்களில் ஒருவர் பின்னர் சடலமாக மீட்கப்பட்டார்.

இவர்களை ஏற்றிய வாகனம் அக்கரைப்பற்று - அம்பாறை வீதி வழியாக, 6 ஆம் கட்டையில் நிறுத்தப்பட்டது. அந்த நேரம் குறிப்பிட்ட இளைஞர்களில் ஒருவர் தனது கைகளை அவிழ்த்து, வாகனத்தின் பின்பக்கமாக ஓடித் தப்பியுள்ளார். இவரது தகவலின்படி, பொலிஸ் குற்றப்புலனாய்வுத்துறையினரே இதில் நேரடியாகத் தொடர்புபட்டிருக்கின்றனர். தமிழ் - முஸ்லிம் மக்களிடையே கலவரத்தைத் தூண்டும் நோக்குடன், இதனைச் செய்துள்ளதாக அக்கரைப்பற்று பிரதேச முஸ்லிம்கள் மத்தியில் கருத்துகள் நிலவுகின்றன.

குறிப்பிட்ட சம்பவத்தில் 2 முஸ்லிம் இளைஞர்களும், ஒரு தமிழ் இளைஞரும் சுட்டுக் கொல்லப்பட்டதோடு, ஓட்டோவும் தீவைத்து எரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கடற்படை முகாம் தாக்குதல் படைத்தரப்பு மறுப்பு!

திருகோணமலை

திருகோணமலை குச்சவெளி கடற்படை முகாம், விடுதலைப் புலிகளால் தாக்கப்பட்டதாக ஊடகங்களில் வெளியான செய்திகளைப் படைத்தரப்பு மறுத்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை இரவு கும்புறுப்பிட்டி குச்சவெளி எல்லையில்- இரு இளைஞர்கள் கடற்படையினரால் தாக்கப்பட்டனர்.

இதில் ஒருவர் சுட்டுக் கொல்லப் பட்டார்.

இந்தச் சம்பவத்தின் பின்னர் கும்புறுபிட்டி கடற்படையினர் சரமாரியாக துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர். இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தைப் படையினர் தொடர்ந்தும் தீர்த்துக் கொண்டிருந்தனர்.

இந்தத் துப்பாக்கிப் பிரயோக சத்தத்தைவைத்து, முகாம் மீது தாக்குதல் நடைபெற்றதாகச் செய்திகள் வெளியானதாகப் படைத்தரப்பினர் தெரிவித்தனர்.

# உயர்தரப் பரீட்சையில் 2007 முதல் ஆங்கிலபாடம் கட்டாயமாகும்!

கொழும்பு

க.பொ.த உயர்தரப் பரீட்சையில் இதுவரை காலமும் கட்டாயமாக்கப்படாத ஆங்கிலப்பாட வினாத்தாள் - 2007 ஆம் ஆண்டிலிருந்து கட்டாயமாக்கப்படவுள்ளதாக கல்வியமைச்சுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தப் பாடம் இதற்கு முன்னர் கற்பிக்கப்பட்டாலும், அது உயர்தரப் பரீட்சைக்குப் பயன்படுத்தப்படவில்லை.

இந்த வருடம் உயர்தர வகுப்பை ஆரம்பிக்கும் மாணவர்களுக்கு அது கட்டாய பாடமாக்கப்படும்.

இவ்வாறு இந்தப் பாடம் கட்டாயமாக்கப்படுவதற்குக் காரணம் - தொடர்பாடலில் இயல்புத்தன்மை, தீர்க்கமான சிந்தனை, சந்தர்ப்பத்துக் கேற்ப பணிபுரியும் ஆற்றல் மற்றும் ஆளுமையை அபிவிருத்தி செய்வதற்கு அவசியம் ஆகிய காரணங்களேயாகும்.

(தே)

# நோபல் பரிசுக்காக ஜனாதிபதி சந்திரிகா கனவு கண்டு கொண்டிருக்கிறாராம்!

## தம்பர அமில தேரர்

கொழும்பு

சுனாமி நிவாரண சபை ஒப்பந்தத்தின் மூலம் எவ்வித சிக்கல்களுமின்றி விடுதலைப் புலிகள் - படையினரைத் தாக்கும்போது, ஜனாதிபதி சந்திரிகா நோபல் பரிசுக்காக கனவு கண்டு வருகிறாரென, தேசிய பிக்குகள் முன்னணித் தலைவர் தம்பர அமிலதேரர் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

சுனாமி நிவாரண ச்பை ஒப்பந்தத்தின் பின்னர், பல தடவை படையினர் விடுதலைப் புலிகளுடன் தாக்குதல்களுக்கு உள்ளாகியுள்ளனர். சுனாமி ஒப்பந்தத்தைக் கைச்சாத்திடுவதற்கு அழுத்தம் கொடுத்த ஜனாதிபதி மற்றும் பிரதியமைச்சர் குழு ஆகியோர் இது விடயத்தில் மௌனம் காத்து வருகின்றனர்.

படையினரின் உயிர்களைப் பலியாக்குவதற்கு இடமளித்து, அமைதியாகத் தாம் இருப்பதற்கான காரணத்தை பொறுப்புடன் மக்களுக்கு ஜனாதிபதி தெரிவிக்க வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(தே)

# மங்கள சமரவீரவின் அலுவலகத்தை நவீனமயப்படுத்த ரூ 8.5 கோடி!

கொழும்பு

துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சர் மங்கள சமரவீரவின் அமைச்சு இயங்குகின்ற அலுவலகத்தை நவீனமயப்படுத்த, இலங்கை துறைமுக அதிகார சபையை 8 கோடி 49 லட்சத்து 71 ஆயிரத்து 175 ரூபாவை செலளளவிடவுள்ளதாகத் தெரிவிக்கப் படுளகிறது.

நவீனமயப்படுத்தப்படவுள்ள அலுவலகத்துக்கான ஒப்பந்தத்துக்கு நிர்மாணக் கலைஞரான நிலாம் சொய்சா என்பவருக்கு வழங்க அனுமதிக்கப்பட்ட தொகை - 84 லட்சம் ரூபாவாகும். அலுவலகத்தின் மறுசீரமைப்புச் செலவு 195 லட்சம் ரூபாவாகும். அலுவலகத்தை உள்ளே இடமாற்றுதல் தளபாடக் கொள்வனவு என்பவற்றுக்கான செலவு 30 லட்சம் ரூபா எனவும், நிலத்தை வடிவமைப்பதற்கென 54 லட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன.

இதனைவிட, அலுவலக மின் சார வேலைத்திட்டங்களுக்கு 145 லட்சம் ரூபாவும், குளிர்சாதன அமைப்புகளுக்கு 150 லட்சம் ரூபாவும் செலவிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அமைச்சக அலுவலகத்துக்கான கதிரைகள் மலேசியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படவுள்ளன.

இந்தக் கதிரையொன்றின் விலை- 1500 அமெரிக்கடொலராகும். (1,50,000 ரூபா) எனவும் தகவல்கள் தெரிவித்தன.

(தே)

# கட்டுநாயக்க தாக்குதல் தொடர்பான தகவல் வழங்கியவருக்கான சன்மானம் குறைப்பு பொலிஸ் தலைமையகத்துக்கு எதிராக முறைப்பாடு

கொழும்பு

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதல் குறித்த தகவல்களை வழங்குவோருக்கு, பத்து லட்சம் ரூபா சன்மானமாக வழங்கப்படுமென முன்னர் அறிவித்துவிட்டு, பின்னர் அதனை ஒரு லட்சமாக குறைத்து விட்டதாகத் தெரிவித்து, தகவல் வழங்கிய நபரொருவர் பொலிஸ் தலைமையகத்துக்கெதிராக ஜெனிவாவிலுள்ள மனித உரிமைகள் அலுவலகத்தில் முறைப்பாடொன்றைத் தாக்கல் செய்துள்ளதாக சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது -

பாதுகாப்புக் காரணங்களுக்காகப் பெயர் மற்றும் விபரங்கள் வெளியிடப்பட மாட்டாதெனத் தெரிவித்ததனால், தாக்குதலுக்காக விடுதலைப் புலிகள் திட்டமிட்ட விதம், அவர்கள் வந்த பேரூந்து மற்றும் அவர்கள் வந்து சென்ற அனைத்து இடங்களையும் இரகசியப் பொலிஸாருக்கு தெரிவித்தபோதிலும், குறித்த சன்மானத்தைத் தமக்கு வழங்காதது, மனித உரிமை மீறலெனவும் அவர் தெரி வித்துள்ளார்.

இதற்கிடையில் குறித்த நபரது தகவல்களை அடிப்படையாக வைத்து, தாக்குதல் குறித்த முதலாவது கட்ட விசாரணைகளை நடத்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலான குழுவினரை விலக்கி, இரண்டாவது தடவையாக விசாரணையை மேற்கொண்ட உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் சன்மானம் வழங்கியதனால், முதலாவது குழுவினராலும், பொலிஸ் தலைமையகத்துக்கெதிராக மனித உரிமை ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது குறித்த தகவல்கள் உண்மையாயினும், அது குறித்து எந்தவித தகவலையும் தெரிவிக்க முடியாதெனப் பொலிஸ் தலைமையகத்தின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(தே)

# மீள்கட்டுமானப் பணிகளுக்கென ஐரோப்பிய ஒன்றியம் நிதியுதவி

கொழும்பு

இலங்கையில் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் மீள் கட்டுமானத்துக்கு ஐரோப்பிய ஒன்றியம் 100 மில்லியன் யூரோக்களை வழங்க உறுதியளித்துள்ளதாக ஒன்றியத்தின் உபதலைவர் மாகோ வோல்ட்றோ தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை பண்டாரநாயகா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு மேலும் தெரிவித்ததாவது -

இந்த 100 மில்லியன் யூரோக்களைத் தவிர மனிதாபிமான உதவியாக 30 மில்லியன் யூரோக்களை வழங்கவும் ஒன்றியம் சம்மதத்தை தெரிவித்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

(தே)

# போராளிகளிடம் தேசிய அடையாள அட்டைகளை படையினர் கோருவது போர் நிறுத்த மீறலாகும்!

## அரசுக்கு கண்காணிப்புக்குழு தெரிவிப்பு

அம்பாறை

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அரசியல் வேலைத் திட்டங்களில் ஈடுபட்டுள்ள விடுதலைப்புலிப் போராளிகளிடம், விசேட அதிரடிப் படையினர் தேசிய அடையாள அட்டைகளைக் கேட்பது யுத்தநிறுத்த உடன்படிக்கையை மீறல் என இலங்கை போர்நிறுத்த கண் காணிப்புக்குழு அரச சமாதான செயலகத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளது.

நேற்று விடுதலைப்புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் குயிலின் பனுக்கும், மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்பாளருக் கும் இடையில் சந்திப்பொன்று நடைபெற்றது.

இந்த சந்திப்பில் குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் அரசி யல் வேலைத் திட்டங்களில் ஈடுபட்டுள்ள தமது போராளிகள், விசேட அதிரடிப் படை யினரின் சில நடவடிக்கைகளினால் எதிர்நோக்கும் கெடுபிடிகள் குறித்து, விடுதலைப் புலிகள் தரப்பினால் எடுத்துக் கூறப்பட்டது.

விசேட அதிரடிப்படை யினர், விடுதலைப் புலிகளின் அடையாள அட்டைகளை நிராகரித்து, தேசிய அடையாள அட்டையைப் பெறவேண்டும் என கட்டாயப்படுத்துவது போர்நிறுத்த உடன்படிக்கை மீறல் என குயிலினபன் எடுத்துக் கூறினார்.

இதனை ஏற்றுக்கொண்ட மாவட்ட போர்நிறுத்த கண்காணிப்புக் குழுத் தலைவர் இதுபற்றி அரச சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபாலவுக்கு உடனடியாக அவசர கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார். அப்படி யான நடவடிக்கைகளை நிறுத்த நட வடிக்கை எடுக்குமாறும் கேட் டுள்ளார் அந்தக் கடிதத்தின் பிரதியொன்று விடு தலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் குயிலின்பனுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

# 6 விக்கெட்டுக்களால் இலங்கை அணி மேற்கிந்திய அணியை தோற்கடித்தது!



கொழும்பு—

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி 6 விக்கெட்டுக்களால் அபார வெற்றி பெற்றது.

முதல் இனிங்ஸில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 285 ஓட்டங்களைப் பெற்றநிலையில் - இலங்கை அணி 227 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இந்தநிலையில் இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 3ஆவது நாள் ஆட்டநேர முடிவில் 6 விக்கெட் இழப்புக்கு 56 ஓட்டங்களை எடுத்திருந்தது.

நேற்று நான்காம்நாள் ஆட்டம் தொடர்ந்தபோது - மேற்கிந்தியத் தீவுகள் அணி 113 ஓட்டங்களைப் பெற்றநிலையில் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

ஸ்கோர் 66ஆக இருந்தபோது, பாங்ஸ் 7 ஓட்டங்களுடனும், பவல் ஓட்டம் எதையும் பெறாமலும் ஆட்டமிழந்தனர்.

இதன்பின்னர் நிதானமாக ஆடிய பெஸ்ட், ஸ்கோர் 113 ஆக இருந்தபோது 27 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, அதே ஸ்கோரில் லோசனும் ஆட்டமிழந்தார்.

சந்தர்போல் 48 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார். பந்துவீச்சில் முரளிதரன் 6, வாஸ் 4, விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இதனையடுத்து 171 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இலங்கை அணி நேற்று துடுப்பெடுத்தாடத் தொடங்கியது.

ஸ்கோர் 34ஆக இருந்தபோது ஜெயசூரிய 15 ஓட்டங்களுடனும், சங்கஹார ஓட்டமெதையும் பெறாமலும் லோசனின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தனர்.



பின்னர் ஸ்கோர் 49ஆக இருந்தபோது அத்தபத்துவும் லோசனின் பந்துவீச்சில் 28 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து ஜெயவர்த்தன - டிலான் சமரவீர ஜோடி நிதானமாக ஆடி ஓட்டங்களைக் குவித்தது. ஸ்கோர் 135ஐ எட்டிய போது - லோசனின் பந்துவீச்சில் டிலான் சமரவீர 51 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து விளையாடிய இலங்கை அணி 38.3 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 175 ஓட்டங்களைப் பெற்று 6 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

ஜெயவர்த்தன 41 ஓட்டங்களுடனும், டில்சான் 30 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.



# உதைபந்தாட்டப் போட்டி!

மாதகல்—

தமிழீழ விளையாட்டுத்துறை வலிகாம உதைபந்தாட்ட லீக் ஆதரவில் நமது ஈழநாடு ஊடக அனுசரணையுடன் சுனாமியால் உயிரிழந்த மாதகல் வாழ் பொது மக்களின் ஞாபகார்த்தமாக சென்.தோமஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்கு பற்றும் உதை பந்தாட்டப் போட்டியில் -

இன்று மாலை 3.30 மணிக்கு நடைபெறவுள்ள காட்சி ஆட்டத்தில் பருத்தித்துறை சென். தோமஸ் மகளிர் அணியை எதிர்த்து பொமேர்ஸ் மகளிர் அணியும்,

4.30 மணிக்கு நடைபெறவுள்ள அரையிறுதியாட்டத்தில் யங்ஹென்றீஸ் ஏ அணியை எதிர்த்து ஊரெழு றோயல் ஏ அணியும் மோதவுள்ளன.

## விளையாட்டு

### மாதகல் சென்.தோமஸ் உதைபந்தாட்டம்

# நேற்று நடைபெற்ற போட்டியில் சென்.மேரிஸ் வெற்றிபெற்றது!



மாதகல்—

மாதகல் சென்.தோமஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7பேர் கொண்ட உதைபந்தாட்டத் தொடரின் நேற்றைய ஆட்டத்தில் சென்.மேரிஸ் அணி வெற்றி பெற்றது.

நேற்றுமாலை 4.30 மணிக்கு சென். மேரிஸ் மற்றும் யங்கம்பன்ஸ் அணிகளுக்கிடையிலான ஆட்டம்காட்சி ஆட்டத்தைத் தொடர்ந்து ஆரம்பமாகியது.

ஆட்டம் தொடங்கி 6ஆவது நிமிடத்திலும் 16ஆவது நிமிடத்திலும் சென். மேரிஸ் வீரர் விக்ரர் தனது அணிக்காக இரண்டு கோல்களைப் போட ஆட்டத்தில் சூடுபிடித்தது. இந்தநிலையில் 25, ஆவது நிமிடத்தில் சென். மேரிஸ் வீரர் வின்சிங் ஒரு கோலைப் போட்டு அணியை முன்னிலைப் படுத்தினார். அடுத்து 28ஆவது நிமிடத்தில் அந்த அணி வீரர் ரயிற்ரஸ் பெனால்டி உதை மூலமும், 33ஆவது நிமிடத்தில் விக்ரர் மற்றொரு கோலையும் போட்டனர்.

இந்தநிலையில், 36ஆவது நிமிடத்தில் யங்கம்பன்ஸ் அணிக்காக ராஜ்ரமணன் முதல் கோலைப் போட்டார். தொடர்ந்து 37ஆவது நிமிடத்தில் மேரிஸ் வீரர் வின்சிங் மீண்டுமொரு கோல் போட்டார். அடுத்து 44ஆவது நிமிடத்தில் யங்கம்பன்ஸ் வீரர் ஞானசேகரம் கோலொன்றைப் போட்டார்.

இதனையடுத்து 48ஆவது நிமிடத்தில் சென்.மேரிஸ் வீரர் சுமன்ராஜ் கோலொன்றைப் போட, இறுதியில் சென்.மேரிஸ் 7:2 என்ற கோல் அடிப்படையில் வெற்றிபெற்றது.

நேற்றைய போட்டியில் யங்கம்பன்ஸ் வீரர் ஒருவருக்கு மஞ்சள் அட்டை காண்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

GURNGY
COMPUTER TECHNOLOGY

**Gurngy Computer Technology (Pvt) Ltd.**

- 2.4 GHZ Processor
- 2.56 DDR Ram
- M/B Astrock
- HDD HOG
- Monitor 15'View Sonic
- Key board
- Mouse
- Pad
- Speaker.

54 500/= இல் இருந்து புத்தம் புதிய
Pentium 04 Computers full system 02 Years.

**யாழ்ப்பாணத்தில் முதன் முறையாக 06 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட 06 பேர் பங்குபற்றும் மாபெரும் துடுப்பாட்டப் போட்டிகள்.**

கலந்து கொள்ள விரும்பும் அனைத்து அணிகளும் கீழ்வரும் முகவரியுடன் கிராம சேவையாளரின் உறுதிப்படுத்திய கடிதத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**விண்ணப்ப முடிவு திகதி :- 30.07.2005**

**Gurngy Computer Technology**

*N0 97, Station Road, Jaffna.*

*Marketing: 077 - 9061291, 0777 - 593764.*

## மாணவர்களின் நலன் கருதி
# உடுப்பிட்டி வடக்குப் பகுதிக்கு பொதுநூலகம் அவசியம் !
## பிரதேச முன்னேற்றச் சங்கம் கோரிக்கை

மானிப்பாய் —

மாணவர்களின் கல்வி வளர்ச்சி அபிவிருத்தியை முன்னெடுத்துச் செல்வதற்காக - உடுப்பிட்டி வடக்குப் பகுதிக்குப் பொது நூலகம் அமைத்துக் கொடுக்க வேண்டிய அவசிய தேவை ஏற்பட்டுள்ளதாக. உடுப்பிட்டி வடக்குப் பிரதேச முன்னேற்றச் சங்கத் தலைவர் தே.பிரசாத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

உடுப்பிட்டி வடக்குப் பிரதேசம் - கொம்மாந்துறை, கெருடாவில், கம்பர்மலை, ஊிக்காடு, நாவலடி, மயிலியதனை ஆகிய விவசாயக் கிராமங்களைக் கொண்ட, பரந்து விரிந்த பிரதேசமாகும்.

இங்கு மாணவர்களின் கல்வித் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையில், கடந்த 50 வருடங்களுக்கு மேலாக பொது நூலகம் ஒன்று இல்லாதிருந்தது.

பொது நூலகம் ஒன்று அவசியம் தேவையானதென கடந்த 5 வருட காலமாக வல்வெட்டித்துறை நகர சபைக்கும் , யாழ். அரசாங்க அதிபருக்கும் தெரியப்படுத்தியும், இதுவரையில் எந்த நடவடிக்கையும் ஏடுக்கப்படவில்லை.

மேலும் பருத்தித்துறை பிரதேச செயலாளர் கூட்டத்துக்கு, எமது சங்கப் பிரதிநிதிகள் மாதாந்த ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் சந்திப்பதற்கான அழைப்பு விடுவதில்லை.

இதனால் எமது உடுப்பிட்டி வடக்குப் பிரதேச முன்னேற்றச் சங்கத்தின் கிராமிய எழுச்சித் திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலையேற்பட்டுள்ளது.

மேலும் யாழ். அரசாங்க அதிபர் எமது சங்கப் பிரதிநிதிகளை அழைத்துப் பேசுவதற்கு எமக்கு அழைப்பு விடுத்துள்ளதாகவும் தலைவர் தே.பிரசாத் மேலும் தெரிவித்தார்.

(100)

# உள்ளூராட்சி வருமான மேற்பார்வையாளர்களின் பிரச்சினைகளை உடனடியாகத் தீர்க்க முடிவு!
## வட - கிழக்கு மாகாண ஆளுநர் நடவடிக்கை

மானிப்பாய் —

யாழ்.மாவட்ட உள்ளூராட்சித் திணைக்கள வருமான மேற்பார்வையாளர்களின் நியமனத்தர நிலையையும், சம்பள முரண்பாடுகளையும் தீர்க்குமாறு கோரி -அகில இலங்கை உள்ளூராட்சி சேவைகள் தொழிற்சங்க ஒருங்கிணைப்புச் சம்மேளனம் அண்மைக்காலமாக வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநரிடம் கோரிக்கை விடுத்திருந்தது.

.இந்தத் தொழிற்சங்கத்தின் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட ஆளுநர் - யாழ்.மாவட்ட உள்ளூராட்சித் திணைக்கள வருமான மேற்பார்வையாளர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும்படி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டதுடன்,

இது தொடர்பாக அகில இலங்கை உள்ளூராட்சி சேவைகள் தொழிற்சங்க ஒருங்கிணைப்புச் சங்கத்தின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் எஸ்.சந்திரகுமாருக்கு இது குறித்து அறிவித்துள்ளார்.

## குருநகர் பாதுகாப்பு வலயத்திலுள்ள
# ஐஸ் தொழிற்சாலையில் உபகரணங்கள் சில மாயம்!

குருநகர் —

குருநகர் உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள ஐஸ் தொழிற்சாலையில் இருந்த உபகரணங்கள் சில காணாமற் போயுள்ளதாக, யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

1995 ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்த நடவடிக்கையின்போது, இந்த ஐஸ் தொழிற்சாலை செயலிழந்ததுடன், உபகரணங்கள் சில பழுதடைந்திருந்தன. இதன் பின்னர், இந்தப் பகுதியில் இராணுவத்தினர் பாரிய முகாம் ஒன்றை அமைத்ததுடன், அந்தப் பிரதேசத்தை உயர்பாதுகாப்பு வலயமாகவும் பிரகடனம் செய்தனர்.

கடந்த எட்டு வருடங்களாக இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருந்து வரும் சீநோர் ஐஸ் தொழிற்சாலையின் ஐஸ் உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்டு வந்த நான்கு பிளேற் உள்ளிட்ட, பல உபகரணங்கள் காணாமற் போயுள்ளதாக என்று வடகடல் நிறுவனம் - யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளது.

இதனையடுத்து உயர்பாதுகாப்பு வலயத்துக்கு வெளியே அமைந்திருக்கும் வடகடல நிறுவனத்தின் பாதுகாப்பு உத்தியோகத்தரை பொலிஸார் விசாரணைக்குட்படுத்தியதாகத் தெரியவருகிறது.

இதேவேளை 1995 ஆம் ஆண்டுக்கு முன்பு இந்த உபகரணங்கள் அங்கு பழுதடைந்த நிலையில் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் பகுதி இராணுவத்தினர் வசம் வந்த பின்னரே இந்தத் திருட்டு இடம்பெற்றதாகக் படுகிறது.

# தேசிய கல்வியியற் கல்லூரியில் இந்து மாநாடு சிறப்புற ஆரம்பம்



யாழ்ப்பாணம் —

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பொன்விழாவை முன்னிட்டு, அகில இலங்கை இந்து மா மன்றமும், யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியும் இணைந்து நடத்தும் இந்து மாநாட்டின் ஆரம்ப நிகழ்வுகள் - நேற்று முன்தினம் மாலை 3மணிக்கு யாழ். தேசியகல்வியியற் கல்லூரி நாவலர் மண்டபத்தில், அகில இலங்கை இந்து மா மன்றத்தின் தலைவர் கயிலாசபிள்ளை தலைமையில் நடைபெற்றன.

மாநாட்டின் ஆரம்ப நிகழ்வுகளாக - கல்வியியற் கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள ஆலயத்தில் பூசை நடைபெற்று, அங்கிருந்து மங்கள இசையுடன் விழா மண்டபத்துக்கு விருந்தினர்கள் அழைத்துவரப்பட்டனர். விழா மண்டபத்தில் மங்கள விளக்கை இந்துமத குருபீடாதிபதி ஏற்றி வைக்க, வரவேற்புரையை கல்வியியற் கல்லூரி பீடாதிபதி கமலநாதன் நிகழ்த்தினார்.

ஆசியுரையை இந்துமத குரு பீடாதிபதி சிவஸ்ரீ மகேஸ்வரக் குருக்களும், நல்லை ஆதீனமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளும் நிகழ்த்தினர்.

தொடக்கவுரையை சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி நிகழ்த்த, வாழ்த்துரையை அருட்கவி சீ.விநாசித்தம்பி, இளைப்பாறிய உயர் நீதிமன்ற நீதியரசர் வி.விக்னேஸ்வரன், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் சு.மோகனதாஸ், செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் ஆகியோர் நிகழ்த்தினர்.

அறிமுகவுரையை கலாநிதி அ.சண்முகதாசும், சிறப்புரையை தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழக தமிழ் பேராசிரியர் ந.கந்தசாமியும் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வின் இறுதியில் 'இந்துஒளி' எனும் சிறப்பிதழ் வெளியிடப்பட்டது.

கலாநிதி சண்முகதாஸ் சிறப்பிதழை வெளியிட்டு வைக்க, முதல் பிரதியை தங்கம்மா அப்பாகுட்டி பெற்றுக்கொண்டார்.

கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி, அருட்கவி சீ.விநாசித்தம்பி ஆகியோரின் சைவப் பணியைக் கௌரவித்து, கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டிக்கு தெய்வத்திருமகள் எனும் பட்டமும், அருட்கவி விநாசித்தம்பிக்கு ஞான வித்தகர் எனும் பட்டமும் வழங்கி கௌரவிக்கப்பட்டது. இந்து மாநாடு இன்றும், நாளையும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## காணவில்லை

பருத்தித்துறையைச் சேர்ந்த இளைஞன் ஒருவரைக் காணவில்லை என மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறையைச் சேர்ந்த 20 வயதையுடைய மார்க்கண்டு பார்த்திபன் என்ற இளைஞனே கடந்த 7 ஆம் திகதி முதல் காணமல் போயுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வெளிக்கள நிலையம் நடத்தும் உயர்தர மாணவர்களுக்கான பரீட்சை செப்ரெம்பரில் நடத்தப்படும்

உடுவில். —

யாழ்ப்பாணம்கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன், தொண்டமானாறு வெளிக்கள நிலையம் நடத்தும், கல்விப் பொதுத்தராதர உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான பொதுப் பரீட்சை - எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் ஏப்ரல் 2006 ஆம் ஆண்டில் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றுவோருக்கு, செப்ரெம்பர் முதலாம் திகதி தொடக்கம் 15 ஆம் திகதி வரையும் பரீட்சைகள் நடைபெறும்.

தரம் 12 இற்கு செப்ரெம்பர் 7 ஆம் திகதி தொடக்கம் 14ஆம் திகதி வரையும் பரீட்சைகள் நடைபெறவுள்ளன. (101)

# வர்த்தகத் திணைக்கள நிர்வாகம் நுகர்வோர் அதிகார சபையின்கீழ்!

யாழ்ப்பாணம் —

யாழ் மாவட்டத்தில் உள்நாட்டு வர்த்தகத் திணைக்களச் செயற்பாடுகள் யாவும், தற்போது நுகர்வோர் அதிகாரசபையின் கீழ் நடைமுறைப்படுத்தப் பட்டு வருவதாக, யாழ். செயலக நுகர்வோர் அதிகாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதன்படி முன்னர் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வர்த்தகர்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் யாவும் தற்போது நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

யாழ்.செயலகத்தில் உள்ளக வர்த்தகப் பரிசோதகர்களாகக் கடமை புரிந்த அலுவலர்கள் - தற்போது நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபையின் புலன் விசாரணை அதிகாரிகளாக செயற்பட்டு வருகின்றனர்.

சகல வர்த்தக நிலையங்களும் விலைப்பட்டியல் , அறிவித்தல் பலகை என்பவற்றைத் தமது வியாபார ஸ்தாபனங்களில் வைத்திருப்பது கட்டாயமானதாகும். பொதி செய்து பொருட்களை விற்பதாயின், பொதிகளில் உற்பத்தித் திகதி, காலாவதித் திகதி, விலை என்பன பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

மேலும் சகல விதமான வியாபார நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருப்பவர்கள், நுகர்வோரைப் பாதிக்காத வகையில், நுகர்வோர் அதிகாரசபை சட்டத்தை அனுசரித்து, தமது வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும், இவற்றை மீறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.



காரைநகருக்கான குடிதண்ணீர் பவுசர் ஒன்றை, காரை லண்டன் நலன்புரிச் சங்கத்தினர் - காரைநகர் மணிவாசகர் சபையிடம் அன்பளிப்புச் செய்த நிகழ்வில், காரைநகர் உதவி அரசாங்க அதிபர் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். (52)


## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

### அகவை ஒன்று



பெயர் : வி.ஆதித்யா
முகவரி : யாழ்ப்பாணம்.

### அகவை பத்து



பெயர் : பி.சஜீவன்
முகவரி : கந்தர்மடம்.

## வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் : ----------------
முகவரி : ----------------
பிறந்த ஆண்டு: ----------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

----------------
பெற்றோர் ஒப்பம்

# விளையாட்டு அரங்கம்



## தராசுகள் தளம்புகின்றன

சர்வதேச கிரிக்கெட் சபை இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை மினி உலகக்கிண்ணத் தொடரை நடத்தி வருகின்றது. 1998இல் பங்களாதேஷிலே நடைபெற்ற இந்தத் தொடரில் ஒன்பது நாடுகளும், 2000 ஆம் ஆண்டில் கென்யத் தலைநகர் நைரோபியில் நடைபெற்ற போட்டியில் 11 நாடுகளும், 2002 இலங்கையிலும், 2004 இங்கிலாந்திலும் நடைபெற்ற போட்டிகளில் 12 நாடுகளும் பங்குபற்றியிருந்தன.

பங்களாதேஷ், சிம்பாப்வே போன்ற அணிகள் ஏனைய டெஸ்ட் அந்தஸ்துப் பெற்ற நாடுகளுடன் மோதும் போட்டியே சுவாரஸ்யம் குறைந்ததாக இருப்பது கண்கூடாகத் தெரிந்தும் கடைசி 2 மினி உலகக்கிண்ணத் தொடரிலும் மேலும் புதிய நாடுகளை இந்தத் தொடரில் அறிமுகம் செய்தது ICC. பரீட்சார்த்தமாகச் செய்யப்பட்ட இந்த முயற்சிகளில் அனுகூலமான முடிவெதுவும் கிடைக்காததோடு இந்தத்தொடரின் முதல் சுற்று ஆட்டங்கள் ரசிகர்கள் மத்தியில் ஒரு வெறுப்பு நிலையையும் உருவாக்கி இருந்தது.




இதைக் காலங்கடந்த ஞானமாக இப்போது ICC உணர்ந்துள்ளது போலத் தெரிகிறது. அதனால் தான் போட்டிகளில் விறுவிறுப்பை ஏற்படுத்தும் நோக்கில் புதிய விதிமுறையை அறிவித்துள்ளது. இதன்படி தரவரிசையில் முதலாறு இடங்களை வகிக்கும் நாடுகள் நேரடியாக இந்தப் போட்டியில் கலந்து கொள்ளும் தகுதி பெறுகின்றன. ஏனைய நான்கு டெஸ்ட் அந்தஸ்துப் பெற்ற நாடுகளில் இருந்து இரண்டைத் தெரிவு செய்வதற்குத் தகுதிச் சுற்றுப் போட்டிகள் நடத்தப்படுமெனவும் அறிவித்துள்ளது.

ஆனாலும் இந்தப்புதிய முறையானது எந்த நோக்கத்திற்காக இந்தத்தொடர் ஆரம்பிக்கப்பட்டதோ அதற்கு வேட்டு வைப்பதாகவே அமைந்துள்ளது எனலாம். அதாவது பொருளாதார ரீதியில் பலம் குன்றியிருக்கும் நாடுகளுக்குக் கைகொடுக்கும் நோக்கிலேயே இந்தத்தொடர் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதனால்தான் முதலாவது போட்டி பங்களாதேஷிலும் இரண்டாவது போட்டி கென்யாவிலும் நடத்தப்பட்டது. .

இந்த வகையில் இனிவருங் காலங்களில் இந்தப்போட்டிகளை சிம்பாப்வேயில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்படுமானால் அதிலும் சிக்கல்கள் உள்ளன. சிம்பாப்வேயில் வெள்ளையருக்கெதிரான ஆட்சிநிகழ்வதாகச் சுட்டிக்காட்டி சிலநாடுகள் அங்கு செல்வதற்கு மறுப்புத்தெரிவிப்பது ஒருபுறம் இருந்தாலும் அது வேறு விடயம். ICC யின்புதிய விதிப்படி இந்தத் தொடரில் எட்டு நாடுகளே பங்குபற்ற முடியும். இந்த எட்டு நாடுகளுள் சிம்பாப்வே அடங் குமா என்பது சந்தேகத்துக்குரிய ஒன்றே. அந்த வகையில் சிம்பாப்வே இடம் பெறாது விட்டால் அந்த நாட்டில் போட்டிகளை நடத்துவதில் எந்தப் பிரயோசனமும் இல்லை. என்னதான் அந்த நாட்டுக்குக் கை கொடுக்கும்நன்னோக்கில் ICC செயற்படமுனைந்தாலும், அந்நாட்டு ரசிகர்கள் தங்கள் அணியும் அதில் விளையாடுவதையே விரும்புவர்.

மினி உலகக் கிண்ணத்தின் முதல் போட்டி பங்களாதேஷில் 1998இல் நடைபெற்ற போது பங்களாதேஷ் அதில் விளையாடவில்லை. அன்றைய காலப்பகுதியில் பங்களாதேஷுக்கு டெஸ்ட் அந்தஸ்து வழங்கப்படாததால், அந்நாட்டு ரசிகர்கள் அப்போது அது குறித்து அதிகம் வருந்தியிருக்கமாட்டார்கள்.

எனவே இவ்வாறான சிக்கல்களைத் தடுப்பதற்கு உலகக்கிண்ண உதைபந்தாட்டத்தில் கையாளப்படும் முறையை இங்கும் பின்பற்ற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம். அதாவது உலகக் கிண்ணத்தை நடத்தும் நாடு எவ்வாறு நேரடித் தகுதி பெறுகிறதோ அவ்வாறே இந்தச் சுற்றுப் போட்டியை நடத்தும் நாடும் நேரடியாகத்தகுதி பெற அனுமதிக்கலாம்.

இதேவேளை அடுத்த மினி உலகக்கிண்ணம் இந்தியாவில் நடைபெறவுள்ளதால், தகுதிச் சுற்றுப்போட்டிகள் இந்தியாவிலேயே நடைபெறுமென ICC நிறைவேற்று அதிகாரி மல்கம் ஸ்பீட் தெரிவித்துள்ளார். ஆனாலும் இந்தத் தகுதிச் சுற்றுப்போட்டிகளுக்கு உத்தியோகபூர்வ அந்தஸ்து அளிக்கப்படுமா என்பது பற்றி அவர்எதுவும் அறிவிக்கவில்லை.

உத்தியோக பூர்வ அந்தஸ்தற்ற போட்டிகளில் வீரர்கள் ஏனோதானோ என்ற மனப்பான்மையிலேயே விளையாடுவது வழக்கம். ஆனாலும் இந்த எட்டு நாடுகளுள் இடம் பெறாவிட்டால் அது தமது கௌரவத்துக்கு இழுக்காகி விடும் என்பதால் 7,8ஆம் நிலையிலுள்ள நாடுகள் இதனை ஒரு சவாலாகவே சந்திக்கும். எனவே இந்தப்போட்டிகளுக்கு உத்தியோக பூர்வ அந்தஸ்து அளிக்கப்படாவிட்டாலும், அது ஆட்டத்தில் பாதிப்பை ஏற்படுத்தப் போவதில்லை என்றே தோன்றுகிறது.

மேலும் பங்களாதேஷ், சிம்பாப்வே அணிகளின் டெஸ்ட் அந்தஸ்து பறிக்கப்பட மாட்டாதென ICC உறுதியளித்தாலும் இந்தத் தொடரில் எட்டு நாடுகளைப் பங்கு கொள்ளச் செய்யும் முறை அந்நாடுகளுக்கான டெஸ்ட் அந்தஸ்தை நீக்க வேண்டு மெனக் குரல் எழுப்பு வோருக்கு ICCஒத்து வாசிப்பது போன்றே உள்ளது. எனவே டெஸ்ட் அந்தஸ்துப் பெற்ற பத்து நாடுகளையும் கலந்து கொள்ளும்படி செய்யலாம்.

அத்தோடு ICC தரவரிசைப்பட்டியலை எவ்வளவு தூரத்திற்குக் கவனத்தில் எடுத்துக் கொள்ள முடியும் என்பதும் கேள்விக்குரிய ஒன்றாகவேயுள்ளது. ஏனென்றால் ஒரு வருடத்தில் எல்லா டெஸ்ட் அந்தஸ்து பெற்ற நாடுகளுக்கும் ஒரேயளவான சர்வதேச தொடர்கள் இருப்பதில்லை. ஆகையால் தர வரிசையில் பின்தங்கி நிற்கும்நாடுகளின் வளர்ச்சிக்கு இது முட்டுக்கட்டையாகவேயுள்ளது. எனவே இது தொடர்பில் ICC இன்னும் கவனம் செலுத்தவேண்டியது அவசியமாகின்றது.

**- விமலன்.**

## காத்திருக்கும் நாயகன்



கொட்னி வோல்ஸ் சந்தோஷப்படுவாரா?

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் 500 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய பந்து வீச்சாளர்கள் எத்தனை பேர் என்று கேட்டால், இன்றைய தினம் வரைக்கும் மூவர் மட்டுமே என்பது தான் அதற்கான பதில்.

அந்த மூவரும் அவுஸ்ரேலியாவின் ஷேன்வோர்ன், இலங்கையின் முரளிதரன், மேற்கிந்தியத் தீவுகளின் முன்னாள் வீரர் கொட்னி வோல்ஸ் ஆகியோர் தான். ஆனால் இந்தப் பட்டியலில் இன்னொரு வீரரும் மிகவிரைவில் இணைந்து கொள்ளவுள்ளார்.

ஆம், அவர்தான் அவுஸ்ரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் கிளென் மக்ரா. 1993ஆம் ஆண்டு சர்வதேச கிரிக்கெட்டில் கால்பதித்த மக்ரா இதுவரை 109 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 499 விக்கெட்டுக்களுடன் உள்ளார். ஓரிரு மாதங்களுக்கு முன்பு நியூசிலாந்து அணியுடனான போட்டியிலேயே அவர் தனது 499 ஆவது விக்கெட்டைக் கைப்பற்றியிருந்தார்.

500 விக்கெட்டுக்களைக் கைப்பற்றும் நான்காவது பந்து வீச்சாளர், இரண்டாவது வேகப்பந்து வீச்சாளர், இரண்டாவது அவுஸ்ரேலிய வீரர் என்ற பல பெருமைகளை ஒரே நேரத்தில் சூட்டிக் கொள்ளவுள்ள மக்ரா– எதிர்வரும் 21ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள அவுஸ்ரேலியத் தொடரின் முதல் போட்டிக்காக ஆவலுடன் காத்திருக்கிறார்.



கிளென் மக்ரா உனக்கே உனக்கா?

மிகவும் புகழ்பெற்ற இங்கிலாந்தின் லோர்ட்ஸ் மைதானத்தில் 500 ஆவது விக்கெட்டை வீழ்த்துவதில் தான் பெருமையடைவதாகவும், அந்த விக்கெட் இங்கிலாந்து அணியின் தலைவர் மைக்கல் வோன்அல்லது அந்த அணியின் வீரர் அன்ட்ரூ ஸ்ரோஸ் ஆக இருக்க வேண்டும் என்பதே தனது விருப்பம் எனவும் மக்ரா அண்மையில் தெரிவித்திருந்தார்.

இந்த 500 விக்கெட்டுக்களுடன் அவரது சாதனை ஓய்ந்து போவதில்லை. விரைவிலேயே இன்னொரு சாதனையையும் அவரால் நிகழ்த்த முடியும் என்று ரசிகர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆஷஸ் தொடரில் 5 போட்டிகள் நடைபெறவுள்ளன. இந்த ஐந்து போட்டிகளிலும் தலா ஐந்து விக்கெட்டுக்களை வீழ்த்தினால், மேற்கிந்திய அணியின் முன்னாள் வீரர் கொட்னி வோல்ஸின் 519 விக்கெட்டுக்கள் என்ற சாதனையை முறியடித்து விடுவார். அதன் பின்னர் அதிக விக்கெட்டுக்களைக் கைப்பற்றியோர் பட்டியலில் மூன்றாவது இடம் மக்ராவுக்குத்தான்.

**– ஜெயஸ்ரீ.**

## விளையாட்டுக்கள் புனிதமானவை

பிரித்தானியா தைரியமாகவே இருக்கிறது. கடந்த வாரம் ஏறத்தாழ ஐம்பது பேரின் உயிரைப் பறித்து எழுநூறு பேருக்கு மேல் காயப்படக் காரணமாக அமைந்த லண்டன் தொடர்குண்டு வெடிப்பின் பின் - விளையாட்டுத்துறையைப் பொறுத்து இங்கிலாந்து சட்டென்று பின் வாங்குமோ என்று ஒரு நிலைமையைப் பலர் எதிர்பார்த்தார்கள். ஆனால் பிரித்தானியா அந்தச் சோகங்களை உள்வாங்கிக் கொண்டும் தனது நியமமான கருமங்களைச் செய்வதென உறுதி பூண்டுள்ளது.




சூமாக்கர் உண்மைகள் புனிதமானவை

BRITISH GRAND PRIX பற்றி அதில் பங்கு கொள்ளவுள்ள அதிவேக கார் ஓட்டப் பந்தய வீரர் மைக்கல் சூமாக்கர் எந்தத் தொழிலிலும் ஆபத்துக் நிறைந்தது தான். இந்தக் கார்ப் பந்தயங்கள் முன்னமே திட்டமிடப்பட்டவை. இதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகளும், முன்னேற்பாடுகளும் ஏலவே சரியாகத் திட்டமிடப்பட்டுள்ளன.


இன்று உலகின் எந்த ஒரு இடமும் பாதுகாப்பானதென்று கூறிவிட முடியாது. துன்பப்பட்டுப் போயிருக்கும் மக்கள் முகத்தில் ஒரு சிறு புன்னகையை ஏற்படுத்த நான் முயலலாம் அல்லவா என்று கேட்கிறார் சூமாக்கர்.

இதே போலவே இன்னொரு நிகழ்ச்சி BRITISH OPEN GOLF CHAMPIONSHIP. இந்த நான்கு நாள் விளையாட்டுப் போட்டியில் பார்வையாளர்களாகக் கலந்து கொள்ள இருப்பவர்கள் இரண்டு லட்சம் பேர். இந்தச் சுற்றுப் போட்டி தொடர்பான குரல்தரவல்ல அதி காரி ஒருவர் கருத்துக் கூறுகையில் - இந்தச் சுற்றுப் போட்டி நடைபெற்றே தீரும் இதில் மாற்றத்துக்கு இட மில்லை என்று கூறியிருக்கிறார்.

இதில் இன்னொரு சோகம் என்னவென்றால், 2012 ஒலிம்பிக் போட்டிகளை நடத்தும் அரும் பெரும் வாய்ப்பை லண்டன் வென்று, அந்த ஆனந்தக் களிப்பில் இருந்த வேளையிலேயே லண்டன் தொடர் குண்டு வெடிப்புகள் நடைபெற்றன. இதனால் பிரித்தானிய மக்களின் சிறப்பாக லண்டன் மாநகர மக்களின் மகிழ்ச்சி ஆரவாரம், ஒரு நிமிடத்தில் சோகப் பெருவெள்ளமாக மாறிவிட்டது. விளையாட்டுத்துறை ஆர்வலர்களுக்கு இந்த விடயம் பெரும் மனவேதனை தான்.

இன்னொரு விடயம் என்ன வென்றால் - பாகிஸ்தானுக்கு விஜயம் செய்யவிருக்கும் இங்கிலாந்து அணி கராச்சி நகரில் நடைபெற உத்தேசிக்கப்பட்டுள்ள டெஸ்ட் ஆட்டத்தில் அங்கு விளையாடுவதில் உள்ள பாதுகாப்பு அம்சங்களை ஆரா ய்ந்த இங்கிலாந்து கிரிக்கெட் சபைக்குழு இங்கிலாந்து வந்து இறங்கிய அன்று தான் லண்டன் தொடர் குண்டு வெடிப்புகளும் நடைபெற்றது.

அதோடு ஏதென்ஸ் போட்டிகளுக்கு ஒதுக்கப்பட்ட பாதுகாப்புத் தொடர்பான பணத்தில் அரைப் பகுதியே லண்டன் ஒலிம்பிக் போட்டிகளுக்கு ஒதுக்குவதான நிலைமையும் இருந்திருக்கிறது.



ரொனி பிளேயர் கதம்ப உணர்வு

இப்படியாகப் பல்வேறு விடயங்கள் வெளிவரும் நிலையில், எதிர்காலத்தில் என்னென்ன நிகழ்வுகள் நடைபெறப் போகின்றன என்பதை யாரும் ஊகிக்க முடியாதுள்ளது. அதேவேளை காலம் கழியத்தான் போகின்றது. விளையாட்டு நிகழ்வுகளும் நடைபெறத்தான் போகின்றன. இருந்தாலும் சர்வதேச விளையாட்டுகள் என்று வரும் போது, உலகின் பல்வேறு பகுதிகளில் வாழும் மக்களும் பங்காளர்களாக மற்றும் பார்வையாளர்களாகக் கூடுவது வழக்கம். அவர்கள் சந்தோசத்தை மட்டும் எதிர்பார்த்து வருபவர்கள்.

**– ஜோசப் கிருஷ்ணா.**

# கட்டித்தங்கம் வெட்டி எடுத்து

ஒக்ரோபரில் நடைபெறவுள்ள சுப்பசீரிஸ் தொடருக்கான முன் இறுதிக்கட்ட அணித் தெரிவுப் பட்டியல் வெளிவந்துவிட்டது. இந்தப்பட்டியலுக்குள் புதிதாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளவர். மேற்கிந்தியக் கிரிக்கெட் அணியின் தலைவர் சிவ்நரெய்ன் சந்தர்போல். இவர் இறுதியாக


முரளிதரன் சரித்திர நாயகன்

விளையாடிய பதின்மூன்று டெஸ்ட் போட்டிகளில் ஓட்ட எண்ணிக்கை சராசரி எழுபத்தேழுக்கு மேல் பெற்ற தன் அடிப்படையில் இவரது உள் வாங்கல் நடைபெற்றுள்ளது. இதே வேளை இருபது பேர் கொண்ட அணிக்குள் இருந்து வெளியே தள்ளப்பட்டுள்ளவர்கள் சாமான்யப் பட்டவர்கள் அல்ல. இவர்களைத் தவிர்ப்பதில் மிகப்பெரிய மன உளைச் சலுக்கு உள்ளாகினோம் என்கிறார் கள் தெரிவாளர்கள். அந்த அபாக் கியவான்கள் வீ.வீ.எஸ் லக்ஸ்மன். ராம் நரேஷ்சர்வான். சமிந்தவாஸ். அன்ட்ரு ஸ்ரோஸ். மார்கஸ் ட்ரெஸ் கொதிக். ஹர்பஜன்சிங்.

தற்போதைய நிலவரப்படி இரண்டு வகை ஆட்டங்களுக்கும் தென்னாபிரிக்காவில் இருந்து ஆறு வீரர்கள். பாகிஸ்தானில் இருந்து ஐந்து பேர். இந்தியா. இங்கிலாந்து. மேற்கிந்திய அணிகளில் இருந்து தலா மூவர். நியூசிலாந்து. இலங்கை அணிகளில் இருந்து தலா இரண்டு என்ற வகையில் தெரிவுகள் நடைபெற்றுள்ளன.

இன்னமும் இறுதித் தெரிவுகள் முடியவில்லை. இந்தப் பட்டியல் ஓகஸ்ட் மாதம் மத்தியில் வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இறுதிப்பட்டியல் வெளியிடப்படும்போது. ஒரு நாள் போட்டிக்கான பதினான்கு பேரின் பெயரும். டெஸ்ட் போட்டிக்கான பதின்மூன்று பேரின் பெயரும் அறிவிக்கப்படும். ஒக்ரோபர் ஐந்தாம் திகதி. ஏழாம் திகதி. மற்றும் ஒன்பதாம் திகதிகளில் ஒருநாள் போட்டிகள் நடைபெறும். தற்போதைய நியம முறையான ஐந்து நாள் டெஸ்ட் போட்டிக்குப் பதிலாக ஆறு நாள் கொண்ட டெஸ்ட் போட்டி ஒக்ரோபர் பதின்னான்காம் திகதி முதல் ஒக்ரோபர் பத்தொன்பதாம் திகதி வரை நடைபெறவுள்ளது. இந்த ஆட்டங்களின் முக்கியத்துவம் என்னவென்றால். இவை அனைத்திற்கும் உத்தியோக பூர்வ அந்தஸ்து பெற்றவையாக அங்கீ கரிக்கப்பட்டிருப்பதே. 1992ல் ICCயானது அவுஸ்ரேலியாவில் உலகக் கிண்ணப் போட்டி களை நடத்திய பின்னர் வரும் ஒக்ரோபரில் தான் ICC இன்னொரு சுற்றுப்போட்டியை நடத்த வுள்ளது.

**டெஸ்ட் மற்றும் ஒருநாள் அணி**

| | |
|---|---|
| அன்ட்ரு பிளின்ரொப் | – இங்கிலாந்து |
| ஸ்ரீபன் ஹார்மிசன் | – இங்கிலாந்து |
| ராகுல் டிராவிட் | – இந்தியா |
| ஷேவாக் | – இந்தியா |
| சச்சின் டெண்டுல்கர் | – இந்தியா |
| பிரெண்டன் மக்கலம் | – நியூசிலாந்து |
| டானியல் விற்றோரி | – நியூசிலாந்து |
| சொகைப் அக்தர் | – பாகிஸ்தான் |
| இன்சமாம் உல்ஹக் | – பாகிஸ்தான் |
| ஜக்கலிஸ் | – தென்னாபிரிக்கா |
| மக்காயா என்ரினி | – தென்னாபிரிக்கா |
| ஷோன்பொலொக் | – தென்னாபிரிக்கா |
| முத்தையா முரளிதரன் | – இலங்கை |
| பிறைன் லாறா | – மேற்கிந்தியத் தீவுகள் |

**டெஸ்ட் மட்டும்**

| | |
|---|---|
| மைக்கல் வோண் | – இங்கிலாந்து |
| அனில் கும்ளே | – இந்தியா |
| யூனிஸ்கான் | – பாகிஸ்தான் |
| மார்க் பவுச்சர் | – தென்னாபிரிக்கா |
| கிரேம் ஸ்மித் | – தென்னாபிரிக்கா |
| சந்தர்போல் | – மேற்கிந்தியத் தீவுகள் |

**ஒருநாள் போட்டி மட்டும்**


| | |
|---|---|
| கெவின் பீற்றர்சன் | – இங்கிலாந்து |
| சாகிட் அப்ரிடி | – பாகிஸ்தான் |
| அப்துல்ரசாக் | – பாகிஸ்தான் |
| ஹேர்ஷெல் கிப்ஸ் | – தென்னாபிரிக்கா |
| குமார் சங்ககாரா | – இலங்கை |
| கிறிஸ்கைல் | – மேற்கிந்தியத் தீவுகள் |


பிளின்ரொப் இங்கிலாந்தின் இளவரசன்

– செந்தூரன்.

# உரியவர் எவரோ?

அடுத்த உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் நடைபெற இருப்பது ஜேர்மனியில். நடைபெற இருக்கும் காலம் 2006 ஜூன் 9இல் இருந்து ஜூலை 9 வரை. ஜேர்மனி தன் நாட்டில் சுற்றுப் போட்டியை நடாத்தி வெற்றிக் கிண் ணத்தை வேறுயாரும் கொண்டு போக விட லாமா? இதனால் ஜேர்மனியின் பயிற்றுநர் ஜூர் கன் கிளீன்ஸ்மன் மாத்தி யோசிக்கிறார். அனேக மாக எல்லா அணிகளுக்கும் கோல்காப்பு வீரர் கள் ஓரளவில் இப்பொழுதே தீர்மானிக்கப்பட்டி ருப்பார்கள். ஆனால் தற்போது மூன்று கோல் காப்பு வீரர்கள் ஜேர்மனியின் தேசிய அணியில் இணைக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களில் உல கக் கிண்ணப் போட்டிகளில் பங்கு கொள்ளப் போகும் கோல்காப்பு வீரர் யார் என்பது 2006 மே மாதத்திலேயே தெரிவு செய்யப்படுவார் என்று கிளீன்ஸ்மன் அறிவித்து விட்டார். கோல்காப்பு ஜாம்பவான் ஒலிவர்ஹான், ஜென்லீமன் மற்றும் ரிமோ ஹில்டர்பிராண்ட் ஆகியோரே இம்மூவரும். இதில் ஒலிவர் ஹானுக் குப் போட்டியே இல்லை என்று தான் எந்த உதைபந்தாட்ட ரசிகரும் நினைத்திருப்பார். அதில் உண்மையும் இல்லாமல் இல்லை. ஏனென்றால் கடந்த உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் ஜேர்மனி இரண்டாம் இடத்தைப் பெறுவதற்கு கோல்காப்பு விடயத்தில் பாதுகாப்பு அரணாக விளங்கியவர் ஒலிவர்ஹான். இந்தப் போட்டிகளில் ஜேர்மனிக்குத் தலைமை தாங்கிய ஒலிவர்ஹான் விட்ட கோல்களின் எண்ணிக்கை வெறும் இரண்டே இரண்டுதான். அதுவும் இறுதிப் போட்டியில் பிரேசிலின்



கிளீன்ஸ்மன் துல்லியமே தேவை


ஒலிவர் ஹான் சகாப்தம்

நட்சத்திர வீரர் ரொனால்டோ அடித்த அற்புதமான இரண்டு கோல் களைத்தான் அவரால் தடுக்கமுடியாமற் போய்விட்டது. ஆனால் கிளின்ஸ் மன் பல்வேறு பரிசோதனைகளைச் செய்து கொண்டிருக்கிறார். இந்த வகை யில் ஒலிவர்ஹான் கூட RESERVE ஆசனத்தில் அமர்ந்திருந்ததில் அவருக்கு எந்தக் குறையும் இல்லை. எட்டு வருடங்களாக ஜேர்மன் அணியில் கோலோச்சியவர் ஒலிவர் ஹான். என்றாலும் கூட உலகக் கிண்ணப் போட்டி கள் வரை நடைபெறவுள்ள உதைபந்தாட்டப் போட்டிகளில் மூவருமே தம் திறமையை மாறிமாறிக் காட்ட வேண்டும். யார் முதன்மையோ அவரே ஜேர்மன் அணியின் கோல்காப்பு வீரர்.

– நிர்மலன்.

# இவருக்குத் தனி மவுசு


ரிம்மொண்ட் கொமரி சோதனை தீரவில்லை

அமெரிக்கத் தடகள வீராங்கனை மரியன் ஜோன்ஸ் பங்குபற்றும் போட்டிகளில் அவர் வெல்வது என்பது சர்வசாதாரணம். இது முன்னர் அதாவது 2000 சிட்னி ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்ற காலம். ஆனால் அதன் பின் ஏதென்ஸ் 2004 அவருக்குச் சாதகமாக அமையவில்லை. இப்பொழு தெல்லாம் கலந்து கொள்ளக் கூடியதாக உள்ள தட களப் போட்டிகளிலும் கூட, தனது உபாதைகளைக் காரணம் காட்டிக்கலந்து கொள்ளாமல் இருப்பதே மரியன் ஜோன்ஸின் பாணியாக இருக்கிறது. அமெரிக்காவில் நடைபெற்ற 100 மீற்றர் ஓட்டப் பந்தயம் ஒன்று, 200 மீற்றர் ஓட்டப்பந்தயம் ஒன்று . இதன் காரணமாக ஓகஸ்டில் ஹெல்சிங்கி நகரத்தில் நடைபெறவிருக்கும் தடகளப்போட்டிகளில் பங்கு கொள்ளும் சந்தர்ப்பத்தை முற்றாக இழந்துவிட்டார். இவர் உபாதைக் காரணம் காட்டி கலந்து கொள்ளா மல் விட்ட 100 மீற்றர் ஓட்டத்தை 11.10 செக்கன்களில் ஓடி வென்றவர் லீசா பார்பர். ஒட்டு மொத்தமாகப் பார்க்கையில் அவரது முன்னிருந்த வேகம் தற்போது இல்லை என்பதே யதார்த்தம் என்கிறார்கள் விளையாட்டுத்துறை விமர்சகர்கள்.

தற்போது 29 வயதாகும் மரியன் ஜோன்ஸ் 2008 பீஜிங். ஒலிம்பிக் போட்டிகளில் பங்கு கொள்வதைத் தனது இலக்காகக் கொண்டிருக்கிறார் என்பது அவரது பயிற்றுனர், முகாமையாளரின் கருத்து. இரண்டு வருடங்களுக்கு முன் ஒரு மகனுக்குத் தாயான மரியன், அதன் பின் தன் உயர்தரத்தைப் பேண முடியவில்லை. (இதற்கு மகன்பிறந்த ராசியோ, லக்கினமோ காரணமல்ல)

ஏதென்ஸ் 2004 ஒலிம்பிக் போட்டிகளில் 100 மீற்றர் 200 மீற்றர் ஆகிய அவரது மிக விருப்பத்துக்குரிய நிகழ்வுகளுக்கே தகுதி பெற முடியாமல் போய்விட்டது. இவரது பயிற்றுனர் கருத்துக் கூறும் போது, குழந்தைப் பேற்றின் பின்னரான முழு உடற்தகுதியை இப்போதுதான் மரியன் ஜோன்ஸ் பெற்றிருக்கிறார் எனவும், எதிர்காலத்தில் இவரால் நிச்சயம் சாதிக்க முடியும் என்றும் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ஒரு புறம் இவரது இன்றைய நண்பரான ரிம்மொண்ட் கொமரி ஊக்க மருந்துப் பாவனைக் குற்றச்சாட்டில் சிக்கியிருப்பதும் இவரது மன நிலையில் ஒரு துக்கத்தை ஏற்படுத்தியிருக்கலாம். அனேகமாக ரிம்மொண்ட்கொமரி சர்வதேசப்போட்டிகளில் கலந்து கொள்வதில் இருந்து தடைசெய்யப்படலாம் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. எனவே மரியன் ஜோன்ஸின் பாதையில் பல தடைக்கற்கள்.

இன்னும் அமெரிக்காவோ, மரியன் ஜோன்ஸோ நம்பிக்கை இழக்கவில்லை. 2008 பீஜிங் ஒலிம்பிக் போட்டிக ளுக்கு முன் நடைபெறவுள்ள பல்வேறு தடகளப் போட்டிகளில் மரியன் தன் தகுதியை மெதுமெது வாக உயர்த்தி, 2008இல் தன் உச்சத்திற மையை வெளிப்படுத்தி தங்கம் வெல்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இன்றும் கூட பல குறுந்தூர ஓட்ட வீராங்க னைகள் அறிமுகமாகியும் மரியன் ஜோன்ஸ் பற்றிய செய்திகளுக்கு எவ்வித குறையும் இல்லை. இதில் இருந்து மரியன் சில ஆச்சரியங் களை நிகழ்த்தக்கூடியவர் என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

– மக்டலின்.


மரியன் ஜோன்ஸ்

விளையாட்டு அரங்கம்

EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...




தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com



# உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு ஏழு உழவு இயந்திரங்கள் வழங்கப்பட்டன



தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கிளை நிறுவனமான சமூக, பொருளாதார அபிவிருத்தி வங்கியால், உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு 7 உழவு இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களின் பணிகளை ஊக்குவிக்கும் வகையில் கடன் அடிப்படையில் இந்த உழவு இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு நேற்று முன்தினம் காலை 10 மணிக்கு சமூக, பொருளாதார அபிவிருத்தி வங்கியின் மேலாளர் பா.சிறீஸ்கந்தராஜா தலைமையில் நடைபெற்றது.

கிளிநொச்சி அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், போரால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான கல்வி தொழில் வாய்ப்பு நிறுவனம், வடமராட்சி கிழக்கு சுனாமி விசேட செயற் திட்டப் பிரிவு, யாழ்ப்பாணம் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், வன்னி நிர்மாண தொழில்நுட்ப நிறுவனம், முல்லைத்தீவு அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் ஆகியவற்றுக்கு உழவு இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் தயா குணரத்தினசிங்கம், கரைச்சி விசேட ஆணையாளர் பொன். நித்தியானந்தன், கிளிநொச்சி மாவட்ட உதவி விவசாயப்பணிப்பாளர் சீதா ஆனந்தராசா, கூட்டுறவு உதவி ஆணையாளர் க.கந்தசாமி, சமூக ஆற்றுப்படுப்படுத்தற் பிரிவுப் பணிப்பாளர் ம.செல்வராசா ஆகியோர் உட்பட, பலர் கலந்து கொண்டனர்.

கடந்த மாதம் திருகோணமலை மாவட்டத்திலுள்ள கட்டைபறிச்சான், சேனையூர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மூன்று தனிப்பட்ட பயனாளிகளுக்கு சமூக, பொருளாதார அபிவிருத்தி வங்கியினால்- கடன் அடிப்படையில் மூன்று உழவு இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு விளையாட்டு மைதானம் திறந்து வைப்பு

கிளிநொச்சி

இளையோர் செயற்பாட்டு நிறுவனமும், சிறுவர் பாதுகாப்பு நிதியமும் இணைந்து, சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான விளையாட்டு மைதானத்தை அமைத்துக் கொடுக்கும் திட்டத்தின் கீழ், முல்லைத்தீவு மாவட்டத்தில் உப்புமாவெளி இடைத்தங்கல் முகாமுக்கான சிறுவர் விளையாட்டு மைதானம் - வைபவ ரீதியாக கடந்த வியாழக்கிழமை மாலை 4.00 மணிக்கு திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வின் பொதுச்சுடரை முகாம் தலைவர் ச.பிரதீபன் ஏற்றிவைத்தார். தேசியக் கொடியை உதைபந்தாட்ட லீக்கின் முல் லைத்தீவு மாவட்டத் தலைவர் கே.சிவனடியார் ஏற்றிவைத் தார்.

அகவணக்கத்தைத் தொடர்ந்து விளையாட்டு மைதானத்துக்கான பெயர்ப்பலகையை கே.சிவனடியார் திரைநீக்கம் செய்து வைக்க, மைதானத்தை இளையோர் செயற்பாட்டு நிறுவன திட்ட முகாமையாளர் எஸ்.ஜீவா நாடாவைவெட்டித் திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து முல்லைத்தீவு உதைபந்தாட்ட மத்தியஸ்தர் வின்சன் விளையாட்டு உபகரணங்களை வழங்கினார். இதேபோல் தியோநகர், அளம்பில், செம்மலை வடக்கு, செம்மலை கிழக்கு ஆகிய இடங்களிலும் மைதானங்கள் கையளிக்கப்பட்டன.

# கல்மடுநகர் பாடசாலை மாணவருக்கு சுகாதார அதிகாரிகள் பரிசோதனை

இராமநாதபுரம்

கல்மடுநகர் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில், கண்டாவளை சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில், சுகாதார பரிசோதகர்கள் மற்றும் பொது சுகாதார மருத்துவ மாதுக்கள், கிராமிய தரிசிப்பாளர்கள், சுகாதார உதவியாளர்கள் ஒன்றிணைந்து மருத்துவப் பரிசோதனையை அண்மையில் நடத்தியதோடு - சிகிச்சைகளும், ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

இந்த மருத்துவ முகாமில் தரம் 1 தொடக்கம் 5 வரையான வகுப்புகளைச் சேர்ந்த 88 மாணவர்களுக்கு மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதில் கண், காது, பல் போன்றன பரிசோதிக்கப்பட்டு, சிகிச்சை அளிக்கப்பட்டதுடன், மேலதிக சிகிச்சை மேற்கொள்ள வேண்டிய மாணவர்களுக்கு கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதற்குச் சிபார்சு செய்யப்பட்டது. (இ)

# மீளக் குடியமர முடியாத நிலையில் நாகர் கோவில் பிரதேச மக்கள்!

வடமராட்சி

கடந்த 2000 ஆம் ஆண்டு இடம்பெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக, நாகர் கோவில் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்த 506 குடும்பங்களைச் சேர்ந்த 2ஆயிரத்து 15 பேர் வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் உறவினர் வீடுகளிலும், வாடகை வீடுகளிலும், நலன்புரி நிலையங்களிலும் கடந்த 5 வருடங்களாக வாழ்ந்து வருகின்றனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் கூட, நாகர் கோவில் பகுதி - அதியுயர் பாதுகாப்பு வலயமாக இராணுவத்தால் பிரகடனப்படுத்தப்பட்டு, இராணுவத்தினர் அந்தப் பகுதியில் நிலை கொண்டுள்ளனர். இதனால் இந்தப் பகுதியில் மக்கள் மீளக் குடியமர முடியாத நிலையிலுள்ளனர்.

நாகர் கோவில் தெற்குக் கிராமத்தை சேர்ந்த சுமார் 200 குடும்பங்கள் - பருத்தித்துறை, கரவெட்டி, துன்னாலை ஆகிய பிரதேசங்களில் வசித்து வருகின்றனர். இவர்கள் தமது சொந்த இடத்திலுள்ள தோட்டக்காணிகளிலும், விவசாய நிலங்களிலும் பயிர்ச்செய்கையை மேற்கொண்டு வந்தனர். தற்போது இடம்பெயர்ந்து தங்கியுள்ள இடங்களில் போதியளவு சொந்தக் காணிகள் இல்லாமையால், கூலி வேலை செய்தே இவர்கள் தமது வாழ்க்கையை நடத்திவருகின்றனர்.

இவர்கள் இடம்பெயர்ந்தோருக்கான கொடுப்பனவுகள், நிவாரணங்களைப் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர் நோக்கிவருகின்றனர். (122)

## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

### ஜூலை - 17

1790 : லண்டனைச் சேர்ந்த தோமஸ் சென்ட் என்பவர் தையல், இயந்திரத்தை உருவாக்கி, அதன் தயாரிப்புக்கான காப்புரிமையைப் பெற்றுக் கொண்டார்.

: உலகப் புகழ்பெற்ற பொருளியலாளரான அடம் ஸ்மித் ஸ்கொட்லாந்தில் காலமானார்.

1841 : முற்றுமுழுதாக நகைச்சுவையை மையப் பொருளாகக் கொண்டு வெளிவந்த "பஞ்ச்" என்ற பத்திரிகையின் முதலாவது இதழ் லண்டனில் வெளிவந்தது.

1919 : பின்லாந்து, குடியரசு நாடானதாக அறிவித்தது.

1928 : மெக்ஸிக்கோ ஜனாதிபதி அல்வா ரோ ஒப்ரிகான் மதவெறியனால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

1936 : ஸ்பெயினில் ஆளும் இடதுசாரி முன்னணி - அரசை எதிர்த்து இராணுவப் படைப்பிரிவுகள் புரட்சி செய்ய ஆரம் பித்தன. இந்த உள்நாட்டுப் புரட்சி பெரும் உள்நாட்டுப் போராக மாறி, சுமார் நான்கு வருடங்களுக்கும் மேலாக நடந்தது.

1947 : யாழ்நூல்தந்த விபுலானந்தர் அடிகளார் காலமானார்.

1948 : பாலஸ்தீனத்தில் போர் நிறுத்தம் ஏற்பட்டது.

1955 : கலிபோர்னியாவில் முதன் முதலாக விசித்திர உலகம் என்ற சிறுவர் கண்காட்சிக் கூடம் திறந்து வைக்கப்பட்டது.

1958 : ஜோர்தான் மன்னரது வேண்டுகோளை ஏற்று, பிரித்தானிய இராணுவத்தினர் ஜோர்தானில் வந்திறங்கினர்.

1972 : ஜப்பானில் தொடர்ந்தும் பெய்து வந்த மழையால் நிலச்சரிவு ஏற்பட்டது. 370 இற்கும் மேற்பட்டவர்கள் இறந்தனர். 70 இற்கும் மேற்பட்டவர்கள் காணாமல் போயினர்.

1973 : ஆப்கானிஸ்தான் மன்னர் ஷாஹிர்ஹானின் மைத்துனரான லெப்டினன்ட் முகம்மது தாவூத்கானின் தலைமை யில் நடந்த இராணுவப்புரட்சியின் விளைவாக ஆப்கானிஸ்தான் குடியரசு நாடானதாக அறிவிக்கப்பட்டது.

1979 : ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டம் பிரான்சில் நடைபெற்றது.

: நிக்கரகுவாவில் - 43 வருடகாலமாக சர்வாதிகாரிபோல் ஆட்சி செய்து வந்த ஜனாதிபதி அனாஸ் டாசியோ ஸோமோஸா நாட்டை விட்டுத்தப்பி ஓடினார்.

1982 : விடுதலைப் புலிகளின் முதலாவது மாவீரரான லெப் .சங்கர் தலைமையில் நெல்லியடியில் பொலிஸார் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

1984 : சோயூஸ் - டி - 12 என்ற விண்கலம் ரஷ்யாவால் செலுத்தப்பட்டது. இதில் ஸ்வெட்லானா ஸாவிட்ஸ்காயா என்ற விண்வெளி வீராங்கனையுடன் விளாடிமிர் ட்ஸானி பெகவ், இகார் வோல்க் ஆகிய வீரர்களும் பயணமாகினர். விண்வெளியில் நடந்து சாதனை புரிந்த முதலாவது பெண்மணியான ஸ்வெட்லானா ஸாவிட்ஸ்காயாவின் இரண்டாவது பயணம் இதுவாகும்.

1994 : வியாழன் கிரகத்தின் மீது ஷூமேக்கர் லெவி -9 என்ற வால் நட்சத்திரத்தின் முதலாவது துண்டு மோதியது. அதனால் அந்தக் கிரகத்தில் 1920 கிலோமீற்றர் அகலத்துக்கு தீப்பிழம்பு ஏற்பட்டது.

: உலக வறுமை ஒழிப்புத் தினம்.

தொகுப்பு - சந்துரு

# முல்லைத்தீவு மாவட்டத்தில் வலுவிழந்தோருக்குக் கடன்

முல்லைத்தீவு

வலுவிழந்தோர் நலன்கருதி வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம் வலுவிழந்தோரின் வருமான அதிகரிப்பை ஊக்குவிக்கும் வகையில், சுழற்றி முறைகடன் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்தும் முகமாக, முதற்கட்டப் பயனாளிகளுக்கான கருத்தரங்கு அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வு -புதுக்குடியிருப்பு வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவன வளாகத்தில், நிறுவனத்தின் தலைவர் வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கருத்தரங்கில் துறைசார் வளவாய்வாளர்களான முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், முல்லைத்தீவு மாவட்ட மிருக வைத்திய அதிகாரி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட உதவி விவசாயப்பணிப்பாளர், முல்லைத்தீவு வைத்திய அதிகாரி, முல்லைத்தீவு மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத் திட்ட இணைப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் ஐ.நாஅபி விருத்தித் திட்டத்தின் பிரதிநிதிகள் இருவர் கலந்துகொண்டு வலுவிழந்தவர்களிடையே இந்தத் திட்டம் வெற்றியடையக்கூடிய ஆலோசனைகள், கருத்துரைகளை வழங்கினர்.

இந்தத் திட்டத்தின் இணைப்பாளர் தனது உரையில் -

இந்த மாவட்டத்தில் முதற்கட்டப் பயனாளிகளுக்குரிய கடனுக்கான நிதி கிடைக்கப் பெற்றுள்ளதாகவும், அண்மையில் நடைபெறவுள்ள பயிற்சி வகுப்புகளின் பின்னர் பயனாளிகளுக்கு அவர்கள் செயற்படும் தொழில்களுக்கேற்ப சுழற்சி முறையில் கடன் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

# 'தீயில் எழும் தீரம்' இறுவட்டு வெளியீடு

கிளிநொச்சி

லெப்டினன்ட் சீலனின் 22 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு - சாள்ஸ் அன்ரனி படையணியால் இறுவட்டு ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. தீயில் எழும் தீரம் எனும் இறுவட்டை படையணியின் சிறப்புத் தளபதி லெப். கேணல் நகுலன் வெளியிட்டு வைக்க - புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டம்மான் பெற்றுக் கொண்டார்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு
ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவர்க்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து.
திருக்குறள்

# நமது நோக்கு

## நீதிமன்றத் தீர்ப்பு உணர்த்தி நிற்கும் செய்தி...

-இதுதான் நடக்கும் என எதிர்பார்த்த ஒன்று தற்போது நடந்தேவிட்டது!

- பொதுக்கட்டமைப்பு என்ற பெயரில் சுனாமி ஆழிப் பேரலை அனர்த்தத்துக்குப் பின்னரான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான முகாமைத்துவ கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதற்காக அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையே கைச்சாத்தான உடன்பாட்டின் முக்கிய மூன்று சரத்துக்களுக்கு இடைக்காலத் தடையொன்றை உயர் நீதிமன்றம் விதித்துள்ளமையைத்தான் குறிப்பிடுகிறோம்.

-ஆரம்பம் முதலே பொதுக்கட்டமைப்பின் உருவாக்கத்தை தமது அரசியல் சுயநலத்துக்காக பேரினவாத சிந்தனையுடன் கூடிய அணுகுமுறைகள் மூலம் மிகத்தீவிரமாக எதிர்த்துவந்த ஜே.வி.பியினர் - அவர்களது எதிர்ப்புக்கு அப்பால் சென்று, அரசு - புலிகளுடன் பொதுக்கட்டமைப்புக்கான உடன்பாட்டில் கைச்சாத்திட்டமையால், சீற்றம்கொண்டு இவ்வுடன்பாட்டுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுக்கள் மீதான விசாரணையின்போதே இந்த இடைக்காலத் தடையுத்தரவைப் பிறப்பித்துள்ளது.

- இதன்மூலம் நாம் ஏற்கனவே முன்னர் இந்தப் பகுதியில் குறிப்பிட்டதைப்போன்று, பொதுக்கட்டமைப்பு பேரினவாத சக்திகளின் எதிர்ப்பைமீறி உருவாக்கப்பட வேண்டிய நிர்ப்பந்தம் அரசுக்கு ஏற்பட்டு, அதுதொடர்பான உடன்பாட்டில் புலிகளுடன் இணங்கிச்செயற்பட ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டாலும்கூட, இந்த உடன்படிக்கையின் பிரகாரம் சுமுகமாகவும், நேர்மையாகவும் அந்தக் கட்டமைப்பு இயங்குவதற்கான சூழல் அமையுமா? அப்படிஅமைந்தாலும் அரசு இவ்விடயத்தில் ஆத்மார்த்த ஈடுபாட்டுடன் கட்டமைப்பின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பை வழங்குமா? என்று எழும்பிய பல சந்தேகங்கள் சரியானவைதான் என்பது உறுதியாக்கப்பட்டுள்ளது.

- ஜே.வி.பியினரின் மனுக்களை விசாரணைக்கு ஏற்றுக்கொண்ட உயர்நீதிமன்றம் மிகநுட்பமான - தந்திரோபாயதுடன் இவ்வுடன்படிக்கையானது செயலற்று முடங்கிக் கிடக்கப்போகும் நிலையொன்றை உருவாக்கும் வகையிலான தீர்ப்பொன்றை வழங்கியுள்ளது என்றால் மிகையில்லை.

- இந்த உடன்படிக்கையை சட்டரீதியாக சரியான ஒன்றுதான் என ஏற்றுக்கொண்டுள்ள உயர்நீதிமன்றம்- நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி என்ற வகையில் சந்திரிகா அம்மையாருக்கு எந்தவொரு பிரிவினருடனும் உடன்படிக்கைகளை மேற்கொள்ள உரிமையுண்டு, அதிகாரமும் உண்டு எனவும் விடுதலைப் புலிகளுக்கும் இதேபோன்று உடன்படிக்கைகளை மேற்கொள்ளும் சுதந்திரமுண்டு என்று தெரிவித்துள்ள போதிலும், அதிலுள்ள சில முக்கிய - பொதுக்கட்டமைப்பின் இயல்பான செயற்பாட்டுக்கு மிகவும் அத்தியாவசியமான சரத்துக்களுக்கு இடைக்காலத் தடையை விதித்ததன் மூலம் பொதுக்கட்டமைப்பினூடான மனிதநேயப் பணிகள் முற்றாக செயலற்றுப்போகும் அபாயகரமான சூழலை அது உருவாக்கிவிட்டுள்ளது.

- பொதுக்கட்டமைப்புக்கான செயற்பாடுகளை நெறிப்படுத்தும் பிராந்தியத் தலைமையகத்தின் அமைவிடம், பொதுக்கட்டமைப்புக்கான பிராந்திய நிதியம் மற்றும் பிராந்தியக் குழுக்கள், நிதிநிர்வாகத்தைக் கட்டுப்படுத்தும் செயற்பாடு ஆகிய மூன்று அத்தியாவசிய சரத்துக்களுக்கு நீதிமன்று விதித்துள்ள இடைக்காலத்தடை - உடன்பாட்டின பங்காளிகளான விடுதலைப் புலிகளின் முக்கிய மூன்று கோரிக்கைகளை புறந்தள்ளி வைப்பதாகவே அமைந்துள்ளது.

இந்த மூன்று சரத்துக்களுக்குமான இடைக்காலத் தடை நீக்கப்படும் வரை பொதுக்கட்டமைப்பு உடன்பாடு வெறும் காகிதத்திலான ஒப்பந்த ஆவணமாக மட்டுமே இருக்கும் என்பதே உண்மையாகும்.

பொதுக்கட்டமைப்பின் பிராந்தியத் தலைமையகம் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியில் அமைவதை நீதிமன்றம் விரும்பவில்லையாம். அதாவது, பிராந்திய தலைமையகம் கிளிநொச்சியில் இருந்து வேறு இடத்துக்கு மாற்றப்பட வேண்டுமென்றே அது கருதுகிறதாம். அப்போதுதான் சகல தரப்பினரும் அங்கு சென்றுவர முடியுமாம்.

- அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விடுதலைப்புலிகள் நிராயுத பாணிகளாக அரசியல் மற்றும் பொது மனிதநேயப் பணிகளில் ஈடுபடமுடியாத அளவுக்கு அவர்கள்மீது கொலை அச்சுறுத்தல்களும், தாக்குதல் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வரும் சூழலில் - அவர்களுக்கான பாதுகாப்பினை அரசால் உறுதி செய்ய முடியாத நிலையில் நீதிமன்றம் விதித்துள்ள பிராந்திய தலைமையகத்தின் அமைவிடம் குறித்ததடை, பொதுக் கட்டமைப்பு இயங்கும் சாத்தியத்தை இல்லாமல் செய்துவிட்டது என்றே கூறவேண்டும்.


- எதுவானாலும், பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டதன் மனித நேயப்பணிகளுக்கான நோக்கம் அர்த்தமிழந்துவிட்டது என்றே கூறவேண்டும்.

- நீதிமன்றத் தீர்ப்பின் பின்னர் ஜே.வி.பியின் பிரசாரச் செயலர் விமல் வீரவன்ச பெருமிதத்துடன் (!?) கூறிய வார்த்தைகளும், ஹெல உறுமயவினரின் கருத்துக்களும், இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கான எந்தப் பிரச்சினைகளுக்கும் அமைதி வழியில் தீர்வுகாண முடியும் என்ற அற்பசொற்ப நம்பிக்கையையும் தகர்த்துவிட்டது என்றால் அது உண்மையேயாகும்.

தென்னிலங்கை அரசியல் தலைமைகளின் பேரினவாதக் குணாம்சம் முற்றாக அற்றுப் போகும்வரை, சிறுபான்மை மக்களுக்கு, குறிப்பாகத் தமிழ்பேசும் மக்களுக்கு எந்தவிதமான நியாயமும் எந்தத் தரப்பினராலும் வழங்கப்படப்போவது கிடையாது என்ற அரசியல் யதார்த்தத்தை இந்தப் பொதுக்கட்டமைப்பின் செயற்பாட்டுக்கான சட்டரீதியான 'ஆப்பு' உணர்த்திநிற்கின்றது.

பொதுக்கட்டமைப்பை, சமாதான முயற்சிகளை தொடர்வதற்கான ஒரு ஆதார மூலமாக நம்பிக்கொண்டிருந்த சர்வதேச சமூகம் இந்தத் தீர்ப்புக் குறித்து என்ன சொல்லப்போகிறதாம்?

## நாடும் நடப்பும்




# அவரவருக்கு அதிகாரக் கவலை அல்லல்படும் தமிழ் மக்கள் பற்றி யாருக்கு என்ன கவலை!

தேர்தல் வருமா, இல்லை போர் முந்திக்கொள்ளுமா? இப்படியொரு கேள்விதான் மக்கள் மத்தியில் இப்பொழுது எழுந்திருக்கிறது. ஜனாதிபதி தேர்தலைச் சமாளிப்பதற்கு போர்தான் வழியாக இருக்குமென்று கூடச் சிலர் சிந்திப்பதாகத் தெரிகிறது. தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் பேச்சுவார்த்தை மூலம் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அமைதித்தீர்வு காணமுடியும் என்ற நம்பிக்கை முற்றாக அற்றுப் போய்விட்டதாகவே முடிவுக்கு வந்துவிட்டதாகத் தோன்றுகிறது. போரைத்தான் ஆளும் வர்க்கம் விரும்புவதாக அவர்களின் நடவடிக்கைகள் எடுத்துக் காட்டுகின்றன. இலங்கையின் இன்றைய அரசியல் அமைப்பின்கீழ் இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியாது என்பது, பொதுக்கட்டமைப்பில் உள்ள சில அம்சங்களுக்கு இலங்கை உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்திருப்பதன் மூலம் உறுதியாகிவிட்டது. இனி என்ன நடக்கும்? என்று கேட்டபடி, வந்து அமர்ந்தார் நண்பர் பரமசிவம்.

கடற்கோள் என்ற இயற்கைப் பேரழிவால் பாதிக்கப்பட்ட தமிழர் தாயகத்தில் வாழும் தமிழ் பேசும் மக்களுக்குப் புனர்வாழ்வும், புனரமைப்பும் அளிப்பதற்காக வெளிநாடுகள் மனம் இரங்கிக் கொடுத்த உதவிகளைக்கூட அவர்களுக்குப் பகிர்ந்தளிப்பதற்கு எத்தனை இடையூறுகள், எவ்வளவு தடைகள்? வழித் தேங்காயை எடுத்துத் தெருப்பிள்ளையாருக்கு உடைப்பதற்கே இவ்வளவு தடைகள் என்றால், இவர்கள் தங்களிடம் உள்ளவற்றை எப்படிப் பங்கிட்டுக் கொடுக்க முன்வருவார்கள்? என்று நான் கேட்டேன்.

அவர்களுடைய கவலைகளே வேறு. கடற்கோளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வெளிநாடுகள் அளிக்கும் உதவிகளைத் தாங்கள் எப்படித் தமது பொருளாதார நெருக்கடிகளைச் சமாளிக்கப் பயன்படுத்தலாம் என்பது அவர்களில் சிலரின் கவலை. கடற்கோளால் பாதிக்கப்பட்டவர்களில் வடக்கு - கிழக்கிலுள்ள தமிழ் பேசும் மக்களுக்கு உதவி வழங்குவதில் இப்ப என்ன அவசரம்? அவர்கள் சிங்கள அரசியல் கட்சிகளுக்கா வாக்களிக்கப்போகிறார்கள்? அவர்கள் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகத்தானே இருந்துவருகிறார்கள். அவர்கள் கஷ்டப்பட்டால்தான் புலிகளுக்குக் கொடுக்கும் ஆதரவை நிறுத்திக் கொள்வார்கள் என்று சிந்திப்பவர்கள் இன்னும் சிலர். எங்கள் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக வந்தால் எல்லாப் பிரச்சினைகளையும் தீர்த்துவிடுவார். அதனால் முதலில் ஜனாதிபதி தேர்தல் நடைபெறுவதற்கு முதலில் வழி சமைப்போம் என்று கருதும் ஐக்கிய தேசியக் கட்சியினரும் அவர்களது ஆதரவாளர்களும் மற்றொரு புறம். பதினொரு ஆண்டுகள் அதிகாரத்திலிருந்தாலும் எதையும் முழுமையாகச் சாதிப்பதற்கு இதுவரை வாய்ப்பிருக்கவில்லை. கடற்கோளினால் இப்போது நிதி கிடைத்திருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஜனாதிபதி சந்திரிகா நாட்டின் முன்னேற்றத்துக்குப் பல திட்டங்களைச் சிந்தித்திருக்கிறார். இதைச் செயற்படுத்துவதற்கு இப்பொழுது சந்தர்ப்பம் கொடுக்கவேண்டுமென்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரும், அவர்களது ஆதரவாளர்களும் கருதுகின்றனர். இதேசமயம் சந்திரிகா அம்மையாரைத் தனிமைப்படுத்தி சுதந்திரக் கட்சியிலுள்ள சிலரையும் தமக்கு ஆதரவாகத் திரட்டித் தாம் ஆட்சிக்கு வருவதற்கு ஜே.வி.பியினர் திட்டமிடுகின்றனர். இதேசமயம், கருணாவின் பெயரால் தமிழர்களைக் கொலைசெய்து விடுதலைப் புலிகளுக்கு ஆத்திரமூட்டி அதேநேரம் தமிழ் மக்கள் மத்தியில் பிளவை ஏற்படுத்துவதற்கு தமிழீழ விரோத சக்திகள் படைத்தரப்பினருடன் இணைந்து முனைப்பாகச் செயற்படுகின்றன என்று பரமசிவம் விளக்கம் சொன்னார்.

தமிழ் மக்களின் அவலம் பற்றி யாரும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. அவரவர் கவலை அவரவருக்கு. ரணில் விக்கிரமசிங்கவுக்கு எப்படித் தாம் அடுத்த ஜனாதிபதியாக வருவதென்ற கவலை. அவரின் ஐக்கிய தேசியக் கட்சிக்கும், ஆதரவாளர்களுக்கும் இதே கவலை. சந்திரிகா அம்மையாருக்கோ இன்னும் ஓராண்டு ஜனாதிபதி பதவியில் எதிர்ப்புக்களைச் சமாளித்து எப்படித் தொடர்ந்திருந்துகொண்டு நாடாளுமன்றத்திலோ அல்லது வேறு எந்த வழியிலோ அதிகாரத்தில் தொடர்ந்திருப்பது என்ற கவலை. எப்படி சந்திரிகா அம்மையாரைத் தொடர்ந்து அதிகாரத்தில் வைத்திருப்பது என்பது அவரது கட்சியினரதும் ஆதரவாளர்களினதும் கவலை. இவர்களுக்குத் தமிழ் மக்களின் அவலம் பற்றி என்ன கவலை? என்று கேட்டேன்.

இவர்கள் மட்டுமல்ல, தமிழ் மக்கள் எப்படிப் போனாலென்ன, என்ன பாடுபட்டாலென்ன விடுதலைப் புலிகள்தான் அவர்களின் கஷ்டங்களுக்குக் காரணம் என்று மக்கள் மத்தியில் பிரசாரம் செய்து நம்ப வைப்பது எப்படி என்ற கவலை சங்கரியார், டக்ளஸ் போன்றவர்களுக்கும், அவர்களைச் சார்ந்த துணைப் படையினருக்கும் இருந்துவரும் தீராத கவலை என்று பரமசிவம் சொன்னார்.

தமிழர் தாயகத்தில் வாழும் தமிழ் மக்களும் புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும், தமிழீழத் தமிழ் மக்கள் தமது தாயக பூமியில் பாதுகாப்பாகவும், கௌரவமாகவும், சுதந்திரமாகவும் தலைநிமிர்ந்து வாழவேண்டுமென்பதைக் கனவிலும் நினைவிலும் கருத்தில்கொண்டிருப்போர் இனியும் பொறுமையுடன் சகித்துக்கொண்டிருப்பதை விடுத்து, விடுதலைக்கு வழிகாணப்பட வேண்டுமென்று நினைக்கிறார்கள். இலங்கையில் இனியும் இனப்பிரச்சினைக்குப் பேச்சுவாத்தை மூலம் அமைதித்தீர்வு காணமுடியாதென்பதை சர்வதேச சமூகம் உணர்ந்து அதற்கேற்ப தமது அணுகுமுறையை மாற்றிக்கொள்ளவேண்டும். இல்லையேல் அதை மாற்றக்கூடிய முறையில் விடுதலைப் புலிகள் வழி வகுக்கவேண்டுமென்று சொன்னேன்.

இனி நாம் மீண்டும் கட்டியெழுப்புவோம் தமிழீழ அரசை என்று குரல் கொடுப்போம் என்று சொன்னபடி நடந்தார் பரமசிவம்.

## வாசகர் நோக்கு

### அழிக்க முடியாது!

கிழக்கிலங்கையில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களால் எவர் கொல்லப்பட்டாலும் புலிகளே கொலை செய்தார்கள் என்று சில ஆங்கிலப் பத்திரிகைகளும், அவற்றின் சகோதர சிங்களப் பத்திரிகைகளும் செய்திகள் வெளியிடுகின்றன. குருநகரைச் சேர்ந்த இரு அப்பாவி இளைஞர்கள் சமீபத்தில் கொழும்பில்போய் இறங்கியதும் சுட்டுக் கொல்லப்பட்டனர். இக்கொலை பற்றிச் செய்தி வெளியிட்ட கொழும்பு ஆங்கிலத் தினசரிகள் இரண்டு, இவர்கள் புலிகளின் புலனாய்வுப் பிரிவினர் என்றும், சுட்டவர்கள் கருணா குழுவினர் என்றும் தெரிவித்திருந்தன. இப்பொழுது தொடர்ந்தும் யார் கொலை செய்யப்பட்டாலும் புலிகள் கொலை செய்ததாகக் கூறுகின்றன. அப்படியானால் புலிகள் கொல்லப்படும்போது அவர்களைக் கொலை செய்பவர்கள் யார்? கருணா குழு என்று அடையாளம் காண்பவர்களுக்கு அவர்கள் எங்கிருக்கிறார்கள் என்பது தெரிந்திருக்கவேண்டுமே! விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் என்று பிரசாரம் செய்வது இன்று தீவிரமாக முடுக்கிவிடப்பட்டிருக்கிறது. உலகப் பயங்கரவாதிகளுடன் முடிச்சுப் போட்டு புலிகளையும் தமிழ் இனத்தையும் அழிக்கலாம் என்று சிலர் கனவு காண்கின்றனர். இன்று தமிழ் மக்கள்தான் விடுதலைப் புலிகள் என்பதை இவர்கள் மறந்துவிடுகின்றனர். புலிகளை அழிப்பதென்பது தமிழினத்தை அழிப்பது போன்றதே. அது நடக்கவே நடக்காது.

நாவற்குழி கா.சின்னத்தம்பி

# அருணலு

## அருணலு சிறுவர் சேமிப்புக் கணக்கு ஆண்டு 5 மாணவர்களின் பெற்றோருக்கு ஒரு நற்செய்தி

2005 ஆண்டு ஒகஸ்ட் மாத புலமைப்பரிசில் பரீட்சையில் பாடசாலை மட்டத்தில் 1ஆம் 2ஆம் 3ஆம் இடங்களில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று சித்தியடையும் அருணலு கணக்கு வைப்பாளர்களுக்கு பெறுமதியான பணப்பரிசுகள் வழங்கப்பட இருக்கின்றன.

நீங்களும் தாமதிக்காமல் உங்கள் பிள்ளைகளுக்கு அருணலு கணக்கொன்றை அருகில் உள்ள கொமர்ஷல் வங்கிக்கிளைக்கு சென்று ஆரம்பியுங்கள். பரீட்சையின்போது கணக்கில் குறைந்தது ரூபா 5000/- மீதியிருக்கும் சகல மாணவர்களும் இந்த பெறுமதியான பணப் பரிசுகளை பெறுவதற்கு தகுதியுடையவர்கள் ஆகிறார்கள்.

ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் சகல மாணவர்களுக்கும் அருணலு சார்பாக எமது நல் வாழ்த்துக்கள்.

கொமர்ஷல் வங்கி

உங்கள் நலமே எங்கள் நோக்கம்.

SSCB INTERNATIONAL

### ராஜா

விக்ராந், லக்ஷ்மிராய் நடித்த



கற்க கசடற

பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30

### நாதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)

இன்று முதல்

அக்சன் கிங் அர்ஜுன், சிநேகா நடித்த



காட்சிகள் : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

### மனோகரா யாழ்ப்பாணம்

4 ஆவது வெற்றி வாரமாக

சியான் விக்ரம், சதா ஆகியோரின் சிறந்த நடிப்பில்

20 ஆம் திகதி வரை

அந்நியன்

anniyan

22 ஆம் திகதி முதல் அதிரடி வெளியீடாக மாதவன், சதா நடித்த

பிரியசகி



காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30

### நிறைஞ்சனாஸ் சங்கானை

சத்தியராஜ், நமீதா, மும்தாஜ் நடித்த

அஜித், தேவயானி நடித்த

காதல் கோட்டை

பஸ் போக்குவரத்துபாதை

இல 782 – காரைநகர் / 787 மாதகல்

காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே)

### நாகம்ஸ் சுன்னாகம்

ஷாம் லைலா அஸின் பூஜா நடித்த



உள்ளம் கேட்குமே

காட்சிகள்- 11.00,3.00, 6.00 (பழைய நேரம்)

### இணையச்சேவை

இணையத்தளத்தில் இணைக்கும் Animations, Short windows Movie உடன் web sites Soft wares வடிவமைத்துக் கொடுக்கப்படும். கட்டணம் 5000/= இலிருந்து.... கா. ஜீவலிங்கம், மே/பா. தி. இராசேந்திரம், 2 ஆம் வட்டாரம், கோம்பாவில், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.



## வாழ்நாள் முழுவதும் வளமுடன் வாழ

அண்ணா

# ஜீவாகாரம்

- வளர்ந்துவரும் குழந்தைகளுக்கும்
- கர்ப்பத்தாய்மார்களுக்கும்
- பாலூட்டும் தாய்மார்களுக்கும்
- போஷாக்குக் குறைவான குழந்தைகளுக்கும்

அண்ணா தொழிலகம், இணுவில் T.P: 3565



## ஹீரோ சைக்கிள் நம்பர் 1 உலகெங்கும்

HERO CYCLES

- ISO 9001 & 9002 சர்வதேச சான்றிதழ் பெற்றது.
- 8 வருட உத்தரவாதம் உடையது.
- உலகளாவிய ரீதியில் 85 மில்லியன் ஹீரோ சைக்கிள்கள் விற்பனையாகியுள்ளன.



உன்னத சவாரிக்கு உத்தரவாதம் 100%

வடமாகாண ஏகமுகவர்கள்:

E.S.P ரேடிங் கம்பனி (பிரைவட்) லிமிட்டட்.

இல. 5, யும்மா பள்ளி ஒழுங்கை,

கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

# லண்டன் குண்டுவெடிப்பு சூத்திரதாரி எகிப்தில் கைது செய்யப்பட்டார்



லண்டன் —

லண்டனைத் தகர்க்க வெடி குண்டு தயாரித்துக் கொடுத்து விட்டு எகிப்துக்குத் தப்பியோடிய தீவிரவாத இயக்கத் தலைவர் எகிப்து தலைநகர் கெய்ரோவில் அமெரிக்காவினது உளவுப்படையின் உதவியுடன் கடந்த வியாழன் இரவு கைது செய்யப் பட்டார்.

லண்டனில் கடந்த 7 ஆம் திகதி சுரங்க ரயில்களிலும், ஒரு மாடி பஸ்ஸிலும் குண்டுகள் வெடித்ததில் 54 பேர் பலியானதுடன், 700 பேர் காயமடைந்தனர்.

குண்டுவைத்த 4 பேரில் ஷாஷாத் தன்வீர் (வயது 22), சித்திக்கான் (வயது 30), ஹபீப் ஹுசைன் (வயது 18) ஆகிய மூவரும் பாகிஸ்தானைப் பூர்வீகமாகக் கொண்டு லண்டனில் வசித்தவர்கள் என்பது விசாரணையில் தெரியவந்துள்ளது. குண்டு வைத்த 4 தற்கொலைப்படைத் தீவிர வாதிகளும் பயணிகளுடன் சேர்ந்து உயிரிழந்தனர்.

அவர்களுக்கு வெடிகுண்டுகள் தயாரித்து பயிற்சியும் கொடுத்த மெக்டி நாசர் என்ற தீவிரவாதத் தலைவரைப் பொலிஸார் தேடி வந்தனர். 33 வயதான அவர் எகிப்து நாட்டைச் சேர்ந்தவர். இங்கிலாந்தின் லீட்ஸ் பகுதியில் தங்கி வெடிகுண்டுகளைத் தயாரித்தார்.

லண்டனில் குண்டு வெடிப்பதற்கு 2 வாரத்துக்கு முன்பு எகிப்துக்கு இவர் சென்றுவிட்டார்.

இவர் கடந்த வியாழன் இரவு தலைநகர் கெய்ரோவின் புறநகர்ப் பகுதியில் கைது செய்யப்பட்டார். அமெரிக்காவின் உள்நாட்டு உளவு நிறுவனமான எவ்.பி.ஐயின் அதிகாரிகளும், எகிப்து பொலிஸாரும் சேர்ந்து அவரைப் பிடித்தனர். அவரிடம் உடனடியாக விசாரணை ஆரம்பமாகியது. அவர் இனி லண்டனுக்குக் கொண்டு செல்லப்படுவார்.

இவ்ரே லண்டனில் குண்டு வைத்த தீவிர வாதிகளுக்காக ஆயுத தொழிற்சாலையை உருவாக்கியவர்.

தீவிரவாதிகள் தங்குவதற்கு இடம் கொடுத்தவர்கள், உதவியவர்கள் என மேலும் 3 அல்லது 4 பேர் இங்கிலாந்தில் இருக்கலாம் எனக் கருதி அவர்களைத் தேடும் பணியில் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

பாகிஸ்தானைப் பூர்வீகமாகக் கொண்டவர்களில் ஷாஷாத் தன்வீர் 2 முறை லண்டனில் இருந்து பாகிஸ்தான் சென்றுள்ளார். அங்கு 4 மாதங்கள் தங்கியதாக தற்போது தகவல் வெளியாகியுள்ளது. ஆனால், அவர் பாகிஸ்தான் சென்றது ஏன்? அங்கு எங்கு தங்கினார்? யார் யாரைச் சந்தித்தார் என்ற விபரங்கள் கிடைக்கவில்லை.

இஸ்லாமாபாத்தில் வசிக்கும் தன்வீரின் மாமா - தன்வீர் இஸ்லாமிய பள்ளி, அல்லது மதரசாவுக்கு வந்திருக்கலாம் என்று தெரிவிக்கிறார்.

தன்வீர் பாகிஸ்தானுக்கு 2003 ஆம் ஆண்டில் முதன்முறையாகவும், அதன்பிறகு 2 ஆவது முறை சென்றதாகவும் தகவல்கள் கூறுகின்றன. பாகிஸ்தானுக்கு சட்டப்படி துறைமுகம் வழியாக வருபவர்களை அரசு அதிகாரிகள் புகைப்படம் எடுப்பார்கள்.

'பிஸ்சஸ்' என்று அழைக்கப்படும் இந்த முறை 2002 ஆம் ஆண்டிலிருந்து அங்கு அமுலில் உள்ளது. அதன்பிறகு 2 முறை அங்குவந்த தன்வீர் படம் பிடிக்கப்படவில்லை. அப்படியென்றால் அவர் சட்டவிரோதமாக அங்கு வந்தாரா என்ற கேள்வி எழுந்துள்ளது.

தன்வீர் 2 முறை பாகிஸ்தான் வந்தார் என்ற செய்தி வெளியானதும் பாகிஸ்தான் அதிபர் முஷாரப் பதறிப்போய்விட்டார். பாகிஸ்தான் மீது இங்கிலாந்தின் சந்தேகப் பார்வை விழும் என்று அஞ்சிய அவர் அலறியடித்துக்கொண்டு இங்கிலாந்துப் பிரதமர் ரொனி பிளேயருடன் தொலைபேசியில் தொடர்புகொண்டார்.


குண்டுவெடிப்பு விசாரணை தொடர்பாக இங்கிலாந்து கேட்கும் அனைத்து உதவிகளையும் செய்யத் தயாராக இருப்பதாக பிரதமர் ரொனி பிளேயருக்கு முஷாரப் உறுதியளித்தார்.

அத்துடன், குண்டு வெடிப்பில் பலியானவர்களின் குடும்பத்தினருக்கு பாகிஸ்தான் மக்கள் சார்பில் அனுதாபத்தையும் தெரிவித்தார். அதற்கு ரொனி பிளேயர் நன்றி தெரிவித்தார்.

லண்டன் குண்டுவெடிப்பில் ஈடுபட்ட தீவிரவாதிகளுக்கு உலகம் முழுவதிலும் உள்ள தீவிரவாதிக் கும்பல்களுடன் தொடர்பு இருக்கலாம் எனப் பொலி ஸார் சந்தேகிக்கின்றனர்.




# டிஸ்கவரி விண்வெளி ஓட பழுது இதுவரை சீர்செய்யப்படவில்லை!



வொஷிங்ரன் —

ஏழு விண்வெளி வீரர்களுடன் 'டிஸ்கவரி' விண்வெளி ஓடம் நேற்றுமுன்தினம் ஏவப்பட இருந்தது. அதன் எரிபொருள் உணர் கருவியில் ஏற்பட்ட திடீர் பழுதால் 'டிஸ்கவரி'யை ஏவும் திட்டம் கைவிடப்பட்டது. அமெரிக்கா, புளோரிடா மாகாணத்திலுள்ள கென்னடி விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் ஏவுதளத்தில் இருந்து விண்வெளி ஓடம் இன்னும் நீக்கப்படவில்லை. அதே இடத்தில் பழுதைத் திருத்தும் முயற்சியில் நாசா விஞ்ஞானிகள் நேற்று முன்தினம் ஈடுபட்டபோதிலும் பலன் ஏதும் கிடைக்கவில்லை.

பழுது ஏற்பட வாய்ப்புள்ளதாகக் கருதப்படும் 200 அம்சங்களை விஞ்ஞானிகள் பரிசோதித்தனர். ஆனால், பழுதுக்கான காரணத்தைக் கண்டு பிடிக்க முடியவில்லை. பழுது சீர் செய்யப்பட்டால், 'டிஸ்கவரி'யை இன்று ஏவலாம் என்ற திட்டத்திலும் நாசா உள்ளது. அதன் காரணமாகவே ஏவுதளத்தில் இருந்து அதை நீக்காமல் வைத்துள்ளது. 'டிஸ்கவரி' விண்வெளி ஓடத் திட்டத்தின் துணை நிர்வாகியான வானே ஹேல் கூறுகையில் - 'டிஸ்கவரி'யை இன்று ஏவுவது நம்பகமானதல்ல எனத் தெரிவித்தார்.

# இஸ்ரேல் - பலஸ்தீனமிடையே மீண்டும் வன்செயல்கள் வெடிப்பு!




இஸ்ரேல் படையினர் மேற்குக் கரைப் பகுதியில் நடத்திய சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கையில் 26 பலஸ்தீன கிளர்ச்சிவாத சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம், அமெரிக்க வெளியுறவுச் செயலர் கொண்டோ லீசா ரைஸ் இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனப் பகுதிகளுக்கு விஜயம் மேற்கொள்ளவிருந்தவேளை இடம் பெற்றுள்ளது.

கடந்த நான்கு மாதங்களுக்குப் பின்னர் பலஸ்தீன கிளர்ச்சிவாதிகள் இஸ்ரேல் நகரப் பகுதி மீது நடத்திய றொக்கெட் தாக் லில் பெண்ணொருவர் கொல்லப்பட்டார். இதனையடுத்து நேற்று இஸ்ரேல் விமானப் படையினர் காஸாப் பகுதியில் நடத்திய தாக்குதலில் இருவர் காயமடைந்தனர். இஸ்ரேல் விமானப் படையினரின் முதலாவது ஏவுகணைத் தாக்குதல் தொழிற்சாலை ஒன்றின் மீதும் மற்றையது களஞ்சியச்சாலைப் பகுதியிலும் விழுந்து வெடித்தது.

இதேவேளை, நேற்றுமுன்தினம் இஸ்ரேல் விமானப் படையினர் நடத்திய தாக்குதலில் நான்கு ஹமாஸ் கிளர்ச்சிவாதிகளுட்பட ஐவர் கொல்லப்பட்டனர்.

இதனிடையே நேற்றுமுன்தினம் பலஸ்தீன பொலிஸாருக்கும், ஹமாஸ் தீவிரவாதிகளுக்குமிடையே இடம்பெற்ற மோதலில் வீதியில் நின்ற இரண்டு இளைஞர்கள் உயிரிழந்ததுடன் 25 பேர் காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதல் சம்பவம் - ஹமாஸ் கிளர்ச்சிவாதிகள், பலஸ்தீன பொலிஸ் நிலையமொன்றை எரித்ததுடன், பொலிஸாரின் மூன்று ஜீப்புகளின் மீது றொக்கட் தாக்குதலை நடத்திய பின்னர் இடம்பெற்றது.



# 'ஹரி பொட்டர்' புதிய புத்தகம் விற்பனையில் சாதனை!



லண்டன் —

ஜே.கே.ரோவ்லிங் என்ற பெண் எழுத்தாளர் 1990 ஆம் ஆண்டு ஹரி பொட்டர் என்ற புத்தகத்தை வெளியிட்டார். ஹரி பொட்டர் என்ற சிறுவனும் அவனது நண்பர்களும் செய்யும் சாகசங்களை மையமாக வைத்து இந்தப் புத்தகம் எழுதப்பட்டு இருந்தது.

சிறுவர்களைக் கவரும் வகையில் எழுதப்பட்ட இந்தப் புத்தகம் - சிறுவர்களை மட்டுமல்லாமல் முதியோர்களையும்கூட கவர்ந்தது. இதனால், முதல் புத்தகமே விற்பனையில் சக்கை போடுபோட்டது.

இதனால், ஜே.கே.ரோவ்லிங் தொடர்ந்து ஹரி பொட்டர் வரிசையில் புத்தகங்களை பாகங்களாக வெளியிட்டு வருகிறார். இதுவரை 5 பாகங்களை அவர் வெளியிட்டுக் கிறார். 5 பாகங்களுமே மக்களின் அமோக வரவேற்பைப் பெற்றிருக்கின்றன. இந்த 5 பாகங்களிலும் 27 கோடி புத்தகங்கள் விற்பனையாகியுள்ளன. உலகில் எந்த நாவலும் இதுபோன்று விற்பனையாகவில்லை.

இந்தநிலையில் - ஜே.கே.ரோவ்லிங் தனது ஆறாவது பாகத்தை எழுதினார். ஹால்ப் பிளட் பிரின்ஸ் என்ற புதிய புத்தகம் நேற்று முன்தினம் உலகம் முழுவதும் வெளியிடப்பட்டது. இதனை வாங்குவதற்காக - ஹரி பொட்டர் ரசிகர்கள், முன் கூட்டியே பதிவுசெய்து காத்திருந்தனர்.

புத்தக விற்பனை நேற்று முன்தினம் காலை தொடங்கியதும், இதனை வாங்கக் கூட்டம் அலை மோதியது. இங்கிலாந்து, அவுஸ்ரேலியா மற்றும் அமெரிக்காவில் புத்தகம் விற்பனையான கடைகளுக்கு முன்னால் ஆயிரக் கணக்கானோர் வரிசையில் நின்றனர்.

அவுஸ்ரேலியா - சிட்னி நகரில் புத்தகம் வாங்க வந்தவர்களுக்காக சிறப்பு ரயில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டது. புத்தகம் தமக்குக் கிடைக்காமல் போய்விடுமோ என்ற தயக்கத்துடன் ரசிகர்கள் கடைகள் முன்பு திரண்டனர்.

புத்தக விற்பனை தொடங்கி 24 மணி நேரத்தில் 1 கோடி புத் தகம் வரை விற்றிருப்பதாக பதிப்பக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். தொடர்ந்தும் இந்தக் கடைகளில் கூட்டம் அலை மோதிய வண்ணம் இருக்கிறது.

ஹரி பொட்டர் புத்தகம் - எழுத்தாளர் ஜே.கே.ரோவ்லிங்கை உலக பணக்காரர் பட்டியலுக்கு கொண்டுவந்துள்ளது. அவர் இதுவரை 12 ஆயிரம் கோடி ரூபாய் சம்பாதித்திருக்கிறார்.



சுதுமலை வடக்கு ஈஞ்சடி
ஞானவைரவர் தேவஸ்தானம்
தேர்த்திருவிழா

17.07.2005 ஞாயிற்றுக்கிழமை

| | |
|---|---|
| அபிஷேகம் | - காலை 8.00 மணி |
| பூசை - | |
| வசந்தமண்டபப் பூசை | - காலை 10.30 மணி |
| தேரில் ஆரோகணித்தல் | - நண்பகல் 12.00 மணி |
| பச்சை சாத்துதல் | - மாலை 4.30 மணி |

தேர் இருப்பிடம் வந்தடைந்ததைத் தொடர்ந்து
மகேஸ்வர பூசை நடைபெறும்.

தர்மகர்த்தா சபையினரும்
தேர்த் திருவிழா உபயகாரரும்.

(C/1986)

விளம்பர அனுசரணை ▶ தீபன் பல்பொருள் வாணிபம்,
அம்பாள் ரேடர்ஸ் சுதுமலை மத்தி, மானிப்பாய்.

இலவசமாகக் கண்களைப் பரிசோதித்து
தரமான கண்ணாடிகளைப் பெற்றுக் கொள்ளவும்,
இழந்த பற்களுக்கு நிகரான சங்குப் பற்களைக்
குறைந்த விலையில் கட்டவும், மிதப்புப் பற்களுக்கு
நவீன முறையில் கிளிப் போட்டுக் கொள்ளவும்

நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

எரிக்கணேஷ்
பல் மூக்குக் கண்ணாடியகம்

566 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 222 2486

கிளைகள் → கொக்குவில்,
→ சுன்னாகம்.

(C/4294)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# சமாதானத்தை ஏற்படுத்துவது மிகவும் கடினமான பணியாகும்!

## ஆளுநர் ரிரோன் பெர்னாண்டோ

யாழ்ப்பாணம் —

யுத்தத்துக்கு ஒரு நாள் செலவிட்ட பணத்தைக் கொண்டே - தெல்லிப்பளை புற்றுநோய் வைத்திய சாலையைப் புனரமைக்க முடிந்திருப்பதாக வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் ரிரோன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

நேற்று தெல்லிப்பளை புற்றுநோயாளர் வைத்தியசாலையைத் திறந்து வைத்து சிறப்புரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

சுனாமி ஏற்படுவதற்கு 20 நாட்களுக்கு முன்னர் தான் வடக்கு-கிழக்கு ஆளுநராக நான் பொறுப்பேற்றேன். நான் பொறுப்பேற்று 24 மணி நேரத்துக்குள் தெல்லிப்பளை புற்றுநோயாளர் வைத்தியசாலையை உடனடியாகத் திறப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி பணித்தார். இதற்கமைய வெளிநாட்டு நிறுவனங்கள் இந்தப் புற்றுநோயாளர் வைத்தியசாலையைப் புனரமைக்க நிதிகளைத் தரமுன்வந்தன.

இதன் மூலம் துரிதகதியில் மேற்படி வைத்தியசாலையை தற்போது திறந்து வைத்திருக்கிறோம்.

இனிவருங்காலங்களிலும் யுத்தம் ஏற்படாது - தற்போது நிலவும் அமைதிச்சூழல் நிரந்தரமாக நீடிக்க வேண்டுமென்பதே அனைவரதும் பிரார்த்தனை.

நாம் போருக்கு ஒருநாள் செலவு செய்த பணத்தைக்கொண்டே இந்த புற்றுநோயாளர் வைத்தியசாலையை புனரமைக்க முடிந்திருக்கின்றது.

ஆகவே போரொன்று எமது மண்ணில் ஏற்படாவிடின் அதற்காகச் செலவு செய்யும் பணத்தை புனரமைப்புப் பணிகளுக்காகச் செலவிடமுடியும்.

போரால் எமது மக்கள் பாதிக்கப்பட்டிருந்தபோதும் சுனாமி என்ற மீண்டும் ஒரு போர் அவர்கள் மீது அதிக பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. போர் ஒன்றுக்குச் செல்லாது நிரந்தர சமாதானத்தை நோக்கிச் செல்ல வேண்டும்.

போரை ஏற்படுத்துவது சுலபமானது. சமாதானத்தை ஏற்படுத்துவது மிகவும் கடினமானது. தற்போது இந்தப் புற்றுநோயாளர் வைத்திய சாலை மூலம் 2 ஆயிரம் புற்றுநோயாளர்கள் சிகிச்சை பெறவுள்ளனர் என தெரிவித்தார்.

# தேசவிடுதலைக்கு வலுச்சேர்க்கும் கவிஞர் புதுவையின் படைப்புக்கள்

## யோகரட்ணம் யோகி தெரிவிப்பு

கிளிநொச்சி —

கவிஞர் புதுவை இரத்தினதுரையின் படைப்புக்கள் தேச விடுதலைக்கு வலுச்சேர்ப்பதாக இருப்பதாக யோகரட்ணம் யோகி தெரிவித்தார்.

கவிஞர் புதுவை இரத்தினதுரையின் பூவரசம் வேலியும் புலுனிக் குஞ்சுகளும் கவிதை நூல் அறிமுக விழா கிளிநொச்சியில் நேற்று நடைபெற்றபோது இந்த நிகழ்வில் கலந்து கொண்டு அறிமுகவுரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

விடுதலைப் பயணத்தில் இலக்கியப் படைப்புகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. அதனடிப்படையில் இக்கவிஞரின் படைப்புகளும் எமது விடுதலைப்போராட்டத்தின் பல்வேறு பட்ட வெளிப்பாடுகளை வெளிப்படுத்தி வருகிறது.

இவரது கவிதைகள் மக்கள் மனங்களை இலகுவாக வென்றுவிடுபவையாக உள்ளன. இவரது தாயக எழுச்சிப் பாடல்களும் போராளிகளையும், மக்களையும் ஈர்த்துவைக்கின்றவையாக உள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.



இணுவையூர் சிதம்பர திருச்செந்தி நாதன் தலைமையில் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் பிற்பகல் 3.30 மணியளவில் இடம்பெற்ற இந்த நிகழ்வின் ஆரம்பத்தில் முதன்மைச் சுடரை கிளிநொச்சி மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் கலைவாணன் ஏற்றிவைத்தார்.

தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ காவற்துறையின் துணைப் பொறுப்பாளர் மாதவன் ஏற்றிவைத்தார்.

வரவேற்புரையை கவிஞர் வேலணையூர் சுரேஷ் நிகழ்த்தினார், அறிமுகவுரையை யோகரட்ணம் யோகி நிகழ்த்தினார், தமிழீழ அரசியற் துறை துணைப்பொறுப்பாளர் சோ. தங்கன் நூலின் சிறப்புப் பிரதிகளை வழங்கினார். மதிப்பீட்டுரையை பு. சத்தியமூர்த்தியும், ஏற்புரையை நூலாசிரியரும், நன்றியுரையை ஆதிலட்சுமி சிவகுமாரும் நிகழ்த்தினர்.

# காவலரண் மீது துப்பாக்கிச் சூடு!

திருகோணமலை —

திருகோணமலை வேலூர் கடற்படைச் சோதனைச் சாவடி மீது நேற்று முன்தினம் அதிகாலை 3.40 மணியளவில் சிறிய ஆயுதங்கள் மூலமும் கிரனேட் தாக்குதலும் நடத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பின்னர் - இதே சோதனைச் சாவடியில் காலை 11 மணியளவில் முஸ்லிம் பெண் ஒருவரை கடற்படையினர் வெடிபொருள்களுடன் கைது செய்தனர்.

கிண்ணியாவைச் சேர்ந்த ஜெரின் பரீனா (வயது 35) என்ற பெண்ணே கைது செய்யப்பட்டவராவார்.

# புலிகளின் கடற்பலத்தை தடுப்பதற்கு சேதுகால்வாய்த்திட்டம் பயன்படும்!

## இந்தியப் பேராசிரியர் தெரிவிப்பு

சென்னை —

இந்திய அரசின் சேது கால்வாய்த் திட்டம், புலிகளின் கடற்படைப் பலத்தை தடுப்பதற்குப் பயன்படும் என்று இந்திய பேராசிரியர் வி.சூரிய நாராயணன் தெரிவித்துள்ளார்.

கேரள மாநிலம் கோழிக்கோட்டில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பேசுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார் -

சேதுக்கால்வாய்த் திட்டம் இந்திய இராணுவத்துக்கு வலிமை சேர்க்கும் ஒரு திட்டம் என்றும் புலிகளின் கடற்படையின் பலத்தை இது தடுக்கும் என்றும் அவர் மேலும் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசிய இந்திய கடலோர காவற்படை அதிகாரி பிரபாகரன் பலேரி - சேதுக் கால்வாய் திட்டம் மூலம் இந்திய கடற்படையின் கடலோர காவற் படகுகள் இந்தியக் கிழக்குக் கடற்பரப்பிலிருந்து மேற்குக் கடற்பரப்பிற்குக் குறுகிய காலத்தில் சென்றடைய முடியும், இதற்கு முன்னர் இலங்கையைச் சுற்றியே படகுகள் செல்லவேண்டி இருந்தது என்றும் குறிப்பிட்டார்.

கருத்தரங்கில் பங்கேற்றுப் பேசியவர்கள், சேதுக்கால்வாய் திட்டத்தால் இந்திய கடலோர காவற்படையின் பணிக்கு இத்திட்டம் பாரிய பங்களிப்புச் செய்யும் என்றும் -

கூடுதல் கண்காணிப்புப் படைகளை அவசரகாலத்தில் விரைந்து வங்கக் கடலில் குவிக்க இத்திட்டம் ஏதுவாக அமையும் என்றும் தெரிவித்தனர்.

# பொதுக்கட்டமைப்பின் செயற்பாட்டை மட்டுப்படுத்தும் சட்டமூலத்தை ஹெல உறுமய சமர்ப்பிக்கும்!

கொழும்பு —

பொதுக்கட்டமைப்பின் அதிகாரத்தைக் குறைக்கும் வகையில் - ஜாதிக ஹெல உறுமய தயாரித்துள்ள சுனாமி நிதியச் செயற்பாட்டைக் கண்காணிக்கும் சட்டவரைபு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அரசியலமைப்பின் 12-1, 12-2 சரத்துக்களை அடிப்படையாக வைத்து இந்தச் சட்டவரைபு தயாரிக்கப்பட்டுள்ளதாக ஜாதிக ஹெல உறுமயவின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இந்தச் சட்டவரைபு நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டால், சுனாமி நிவாரண சபையின் ஒருங்கிணைந்த நிதியத்துக்கு நிதி வழங்குவது சட்ட விரோதமானது ஆகும். அரச நிதிகளைக் கொடுக்கல், வாங்கல் செய்யும் போது ஏற்படும் சிக்கல்களிலிருந்து பாதுகாக்கும் வகையில் எவரும் இந்தச் சுனாமி நிதியச் சட்டவரைபுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கமாட்டார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்தச் சட்டவரைபின் பிரதி பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிடம் நாளை மறுதினமே ஒப்படைக்கப்படும். தனிப்பட்ட தீர்மானமாக இந்தச்சட்ட வரைபு நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப் படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

(தே)

## சிப்பாய் காயம்!

பயிற்சியின் போது தவறுதலாக துப்பாக்கி வெடித்ததில் சிப்பாய் ஒருவர் காயமடைந்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை கிளாலியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. காயமடைந்த சிப்பாய் கொழும்பு வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக விமானம் மூலம் கொண்டுசெல்லப்பட்டார். சமன்குமர என்ற சிப்பாயே இந்தச்சம்பவத்தில் காயமடைந்தவராவார்.

### ஆளுநர்...

நிகழ்வில் கலந்துகொள்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் மேற்படி திறப்பு விழாவில் கலந்துகொள்ளவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

### அனர்த்த...

சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கருணா குழுவுடன் நெருங்கிய தொடர்பை வைத்திருந்தாகக் கூறப்படும் மேஜர் ஜெனரல் ஹெற்றியாராச்சிக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் இருப்பதாக முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தன.

இவரைப் பாதுகாக்கும் பொருட்டே இந்த மாற்றம் செய்யப்பட் டிருக்கலாமென்றும் சில தகவல்கள் தெரிவித்தன.

### இராணுவச் ....

இதனால் நெஞ்சிலும் வலது கையிலும் காயமுற்ற சிப்பாய் அந்த இடத்திலேயே உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கொம்மாந்துறை இராணுவ முகாமில் பணியாற்றும் இந்தச் சிப்பாய் மீதான தாக்குதலையடுத்து படையினர் அப்பகுதியில் வீடு வீடாகத் தேடுதல் மேற்கொண்டனர்.

### புற்றுநோயாளர்...

ஆலோசகர் ஜெயகாந்தன், யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவசுவாமி, யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி சுனில் தென்னக்கோன், மாகாண பிரதி சுகாதார பணிப்பாளர் கேதீஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதேவேளை தெல்லிப்பளை புற்றுநோயாளர் வைத்தியசாலைக்கு நோயாளர்களும், அவர்களுக்கு உதவியாகச் செல்பவர்களும் எந்தத் தங்கு தடையுமின்றி சென்றுவர விசேட பாதை ஒன்றை அமைத்துத் தருவதற்கு யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி சுனில் தென்னக்கோன் சம்மதம் தெரிவித்துள்ளதாக வடமாகாண பிரதி சுகாதார பணிப்பாளர் கேதீஸ்வரன் தெரிவித்தார்.

### அடுத்த...

தலை வெளியிடுவதற்கு நாடாளுமன்ற செயலாளரான பிரியானி விஜேசேகர அரசாங்க அச்சகருக்கு உத்தரவிட்டுள்ளார்.

அரசியலமைப்பு நிபுணரும் ஆளும் கட்சியின் தேசியப் பட்டியல் எம்.பியுமான விஜேதாஸ ராஜபக்ஷ சமர்ப்பித்த தனிநபர் பிரேரணை தொடர்பாகவே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

முதலாவது பிரேரணையின்படி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை அடுத்த ஜனாதிபதியாக நியமிக்கவும் அவர் பிரதமரின் ஆலோசனையின் படி செயற்படக்கூடியவராக இருக்கத் தக்க வகையில் நியமனம் செய்யவும் வழிவகுக்கும்.

ஜனாதிபதியைத் தெரிவுசெய்யும் நடவடிக்கை இரகசிய வாக்கெடுப்பின் மூலம் மேற்கொள்ளப்படுமென்றும் இந்தப் பிரேரணையில் குறிப்பிடப் பட்டிருப்பதாகவும் அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்தது.

### அரசாங்கத்தின்...

இந்த நிலையில், குடாநாடு அடங்கலான வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் அரசபடையினர் தமது இருப்பை நிரந்தரமாக்கிக் கொள்ளும் நோக்கில் போருக்கான தயார்படுத்தல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

வடக்கு - கிழக்குப் பகுதியெங்கும் படையினர் குவிக்கப்பட்டு வருவதுடன் - விடுதலைப் புலிகளைச் சண்டைக்கு இழுக்கும் வலிந்த முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை, இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தொடர்ச்சியாகப் போராளிகள் கொல்லப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதுடன் - போராளிகளுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு கோரி புலிகள் விடுத்த கோரிக்கைகளையும் அரசு உதாசீனம் செய்துள்ளது.

அரசாங்கத்தின் இந்தப் போக்கைக் கண்டித்து குடாநாட்டு மக்கள் பெருமெடுப்பிலான போராட்டங்களை நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

யாழ். குடாநாட்டிலுள்ள பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் நடைபெறவிருக்கும் இந்தப் போராட்டங்களுக்கான ஏற்பாடுகள் தொடர்பாக நாளை யாழ். பல்கலைக் கழகத்தில் நடைபெறவுள்ள முக்கிய கலந்துரையாடலில் ஆராயப்படவிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாளை காலை 10.00 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவிருக்கும் இந்தக் கலந்துரையாடலில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், கல்வித் துறைசார் பிரதிநிதிகள் மற்றும் நலன் விரும்பிகளைக் கலந்துகொள்ளுமாறு பொது அமைப்புக்களின் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தக் கூட்டத்தில் மிகவும் முக்கியமான தீர்மானங்கள் நிறைவேற்றப்படவிருப்பதாகவும் தெரியவருகிறது.

பபு ரெக்ஸ்
இந்தியாவிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட சுடிதார் துணிவகைகள், சுடிதார் வகைகள், கவுஸ்கோட் துணி வகைகள், லேடீஸ் கவுன், ரீ சேட், ஸ்கேட், பிளவுஸ், கிப்ட் வகைகள், ஓரிபிலேம் கிரீம் வகைகள் அனைத்தையும் நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
பபு கொமினிகேசன்
(பல்கலைக்கழக மக்கள் வங்கிக்கு அருகில்)
இல: 30, வளாகவீதி,
திருநெல்வேலி.




இப்பத்திரிகை இல.267 நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 17.07.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.